
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

| மலர்: 9<br>இதழ்: 11<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ஞு மாசி மீ<br>பிப்ரவரி— மார்ச் '58 | வருட<br>சந்தா<br>ரூ. 2-4-0 |
|---|---|---|


-Page-521-



அடியார்களுக்கு அன்னமளித்து இன்புறு நிலையில்
ஆண்டவனைக் கண்டு களித்த சிறப்புலி நாயனார்
பெரியபுராணச் சித்திர விளக்கம் 47; பக்கம் 483

ACC. NO. 18582

## உள்பொருள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நான் எனும் கணம் | (திருப்புகழ் மணி) ... | 481 |
| 2. | சிறப்புலி நாயனார் | (கி. வா. ஜகந்நாதன்) ... | 483 |
| 3. | சிவபுரம் திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) ... | 485 |
| 4. | கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) ... | 493 |
| 5 | முனிவர் காட்டிய முதல்வன் | (சி. குமாரஸ்வாமி) ... | 496 |
| 6. | ஆறுமுகம் | (கி. வா. ஜ.) ... | 500 |
| 7. | மத்ரகுமாரி | (ரஸபதி) ... | 503 |
| 8. | ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) | ... | 514 |
| 9. | பாவமே புண்ணியம் | (திருமுருக கிருபானந்தவாரி) ... | 522 |
| 10. | Divinity and Democracy | (*Thiruppugal Mani*) ... | 528 |


## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ" முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர். சு. முத்துஸ்வாமி

மலர் 9 | ஹேவிளம்பி ஆம் மாசி [illegible] | பிப்ரவரி-மார்ச்—19[illegible] | இதழ் [illegible]


# "நான் எனும் கனம்"

(திருப்புகழ்மணி)

அருணகிரியார் முருகனை கேட்கின்றார். "எல்லாமற என்னை யிழந்த நலம் சொல்லாய் முருகா! சுரபூபதியே" என்கிறார், நாம் ஒவ்வொருவரும் ஒரு பெரிய பளுவைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம். அதனால்தான், சுகதுக்கங்கள் வந்தால் பொறுக்க முடியாமல் தவிக்கின்றோம். "நான்" "எனது" எனும் அகந்தையைக் கீழே தள்ளிவிட்டால் ஈரேழுலகத்தையும் தாங்கிவிடலாம். இதற்குத் தகுந்த உதாரணம் ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி. உலகத்தில் இருக்கும் மானிடர்போல தன்னை அவர் கருதினரே தவிர வேறாகக் கருதவில்லையாம். அவரைக் கூப்பிட்டு நீங்கள் வடக்கே சென்று ஹிமாலயச் சாரலில் போய் சஞ்ஜீவி மலையை உடனே கொண்டு வரவேணும் என்று ஜாம்பவான் சொன்னவுடன், தனக்கு அவ்வளவு சக்தி யில்லையே என்று பதில் சொன்னாராம். பிறகு, அவருடைய சக்தி ப்ரபாவத்தை வெளியிட்டவுடன், தன் சக்தியை

மக்கள் இனத்தனென வாய்மைமதி நற்செயல்கள்
எக்காலும் என்னில் இருக்கஅருள் எம்மானே.

உணர்ந்தார். ஸ்ரீராமனிடம் தன் பளுவை யெல்லாம் அர்ப்பணித்து விட்ட ஹநுமான், ராமநாம ஜபம் தாரகமாகக் கொண்டிருந்தார். மலைகளைக் கையிலேந்திக் கொண்டு வந்து சேர்த்து விட்டார். போர்க்களத்தில் இறந்தவர்களை யெல்லாம் எழுப்பி விட்டார். மலைகளெல்லாம் தூசிக்கு ஸமானமாய் போய்விட்டனவாம். மலைகளைத் தூக்கும் சக்தி யாவர்க்கும் இருக்கும், அந்த சக்தியை உபயோகிக்க வேண்டுமானால் ஹநுமானிடம் கற்றுக்கொள்ள வேண்டும். மலைகளைவிட ஆத்மா பெரியது. ஆத்மாவிலிருந்து வரும் சக்தி மலைகளை வெகு ஸுலபமாகத் தூக்கிவிடும். ஆனால் அந்த ஆத்ம சக்தியை, மாயையான அகந்தை எனும் மலை அமுக்கி உபயோகமற்றதாகச் செய்து விடுகிறது. அகந்தையைப் பொறையாம் அறிவால் அரிந்துவிட்டால், நம்மை மற்ற காரியங்களுக்கு சக்தியற்றதாய் செய்கின்ற பளு நீங்கிவிடும். இதை அநுபவத்தில் ஸ்ரீ ஹநுமான், 'நான்' எனும் பளுவை ஸ்ரீராமன் பாதார விந்தத்தில் போட்டுவிட்டார். மேலும் 'ராமா', 'ராமா'வெனும் தாரக மந்த்ர ஜெபத்தால் ஆத்ம சக்தியைக் கிளப்பிக் கொண்டார். மலைகளெல்லாம் துரும்பாயிற்றும்.

யான் தானெனும் அகந்தை தீர்த்தவராய் முருகாவெனும் நாம சப்தத்தில் திளைப்பவராய் விளங்கும் அன்பர்களுக்கு, தாங்க முடியாத ஒரு பொருளும் உண்டோ? உலகெலாம் தன்னிடம் அடக்கும் முருகனையே இதயத்தில் தாங்கி நிற்பார்.

---

போற்றி உனைப்புகழ்ந்து பூசிப்பார் தாள்முடிமேல்
ஏற்றவருள் ஏத்தவருள் ஏகம்பத் தெந்தாயே.

# சிறப்புலி நாயனார்

(கி. வா. ஜகந்நாதன்)

சோழ வளநாட்டில் நீர்வளமும் நிலவளமும் மிக்கு விளங்குவது, ஆக்கூர். அங்குள்ள திருக் கோயிலுக்குத் தான்தோன்றி மாடம் என்று பெயர். திருஞான சம்பந்தப் பெருமானும் அப்பர் சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்களை உடையது அவ்வூர்.

"அங்கம் ஆறோடும் அருமறைகள் ஐவேள்வி
தங்கினார் ஆக்கூர்"

"தான்மறையோ டாறங்கம் பலகலைகள்
தாங்கினார் ஆக்கூர்"

என்று சம்பந்தர் அத்தலத்திலுள்ள அந்தணர்களைப் பாராட்டியுள்ளார். அப்படியே அங்குள்ள வேளாளரை,

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூர்"

என்றும், கொடையாளரை

"இன்மையால் சென்றிரந்தார்க் கில்லையென்னா தீத்துவக்கும்
தன்மையார் ஆக்கூர்"

என்றும், அடியாரை

"பொன்னடிக்கே நாடோறும் பூவோடு நீர்சுமக்கும்
தன்னடியார் ஆக்கூர்"

என்றும் சிறப்பித்திருக்கிறார்.

---

வகையாய் நினையுள்கி வாழ்பவர்கள் வாய்திறந்து
தொகையாம் உபதேசம் செய்யவருள் தொல்லோனே.

நீர்வளமும் நீர்மை வளமும் மலிந்த அவ்வூரில் மறைய வர் குலத்தில் சிறப்புலியார் தோன்றினர். அவர் சிவபிரானுக்குரிய தொண்டுகளை இயற்றுவதில் வல்லவராகவும் ஈகைத் திறத்தினில் சிறந்தவராகவும் இருந்தார். இறைவனுடைய அடியார்கள் வந்தால் அவர்களை அடிபணிந்து முன் நின்று இனிய மொழிகளைக் கூறி அவர்களுக்கு இனிய உணவை உண்பிப்பார். அவர்களுக்கு வேண்டிய பொருளையும் வழங்கினர்.

சிவ பக்திக்குரிய அடையாளங்களிலும் இயல்பிலும் அவர் சிறந்து நின்றார். ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் செபித்துத் தம் மரபுக்கு ஏற்ற வகையில் வேள்விகளை இயற்றி அதன் பயனைச் சிவபிரானுக்கே அர்ப்பணம் செய்தார். அடியார்களுக்கும், பிறருக்கும் நலம் புரிந்து தம் மரபிற்கேற்ற அறங்களிலும் தலைநின்று வாழ்ந்த சிறப்புலியார் யாவராலும் போற்றப் பெற்றார். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகச் சைவ உலகம் வழிபடும் நிலையை அடைந்தார்.

"அஞ்செழுத் தோதி அங்கி
வேட்டுநல் வேள்வி எல்லாம்
தஞ்சணி கண்டர் பாதம்
தண்ணிடச் செய்து ஞாலத்
தெஞ்சலில் அடியார்க் கென்றும்
இடையரு அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசன்
தாள்நிழல் தங்கி னாரே"

என்று இவருடைய புகழைச் சேக்கிழார் பாடியுள்ளார்.

---

போற்றி அவர்நெறியைப் போந்தேத்தி ஆனபணி
ஆற்ற அருளுதி ஆறுமுகம் ஆனே.

# சிவபுரம் திருப்புகழ்

## விரிவுரை

### (குகஸ்ரீ)

மனமெ னும்பொருள் வானறை கால்கனல்
புனலு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லேபதி மூணெழு வகையாலே

வருசு கந்துய ராசையி லேயுழல்
மதியை வென்றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனைநி னருள்சேராய்;

செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி யெண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா!

சிறைபு குஞ்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேரற
சிவனு கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே!

கனக னங்கையி னுலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே

கதற வென்றுடல் கீணவ னுருயிர்
உதிர முஞ்சித றுதமு தாயுனு
கமல வுந்திய னுகிய மால்திரு மருகோனே!

தினக ரன்சிலை வேளருள் மாதவர்
சுரர்க ளிந்திர னுரு காதிபர்
திசைமு கன்செழு மாமறை யோர்புக ழுமகோனே!

திரும டந்தையர் நாவிரு வோர்பிறை
அகமொ டம்பொனி னுலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக பெருமானே!

---

குணக்குன்றும் அன்னுரைக் கூடியடி யேனுய்ய
இணக்கி யருள்புரிநீ ஏறுமயில் ஊர்வானே.

(செனனி முதல்......பாலா என்பதுவரை)

(பதவுரை) செனனி—(எதையும் தழைக்கத் தோற்றுவிக்கும அருளொடு) தானே தோன்றியவள்;

சங்கரி—(தன் படைப்பில் வந்த ஆன்ம) இளைப்பைத் தவிர்ப் பவள,

ஆரணி—(அருள நெறி கற்பிக்கும்) வேத தருவின் கிளை களாக விளங்குபவள்;

நாரணி—நீர்மை நிறைந்தவள்;

விமலி—இயல்பாகவே அழுக்கு இல்லாதவள்;

எண்குண பூரணி—எட்டுக் குண நிறைவு எய்தியவள்;

காரணி—(எச் செயலுக்கும்) மூலமாக இருப்பவள்;

சிவை—மங்கள வடிவினள்;

பரம்பரையாகிய—எந்தக் கால்வழியிலும் தலைவியாக இருந் தவள் ஆன;

பார்வதி அருள பாலா—மலைமகள் அருளிய மகனே!;

(சிறை...வேர்அற...வேல் விடும் முருகோனே!)

சிறை புகும் சுரர் (மேல்பெற)—(அவுணர்) சிறையுள் புகுந்த அமரர்கள் மேல் உலகை எய்தவும்;

மாதவர் மேல்பெற—வித்தகரான சிறந்த விரதிகள் மேலான சாதனையின் பயனை மேவவும்;

அசுரர் தம் கிளையானது வேர் அற—அசுரர்களுடைய குலத் தின் வேர் அறுபட்டுப் போகவும்;

சிவன் உகந்து அருள் கூர்தரு வேல்விடும் முருகோனே—சிவபிரான் மகிழ்ந்து உதவிய கூர்மை மிக்க வேலினை ஏவிய இளம்பரிபூரணா!;

(கனகன் என்பது முதல் மருகோனே என்பது வரை)

கனகன் அங்கையினால் அறை தூண் இடை—இரணியன் உள் ளங் கையால் அறைந்த தூணின் நடுவில்;

மனித சிங்கமது ஆய்—நரசிங்க உருவாய் வெளிப்பட்டு;

வரை பார் திசை கடல் கலங்கிடவே பொருதே—(உலக) மலை கள், நிலவுலகம், (எண்) திசை, (ஏழு) கடல் (முதலியன,) நிலைகுலை யும்படி (பெரும்) போர் புரிந்து;

வென்று உகிர் முனையாலே கதற உடல்கீண்—வெற்றி கொண்டு நுனி நகங்களால் கதறும்படி உடலைக் கீறிக் கிழித்து;

---

அல்லல் பிறவிபல ஆறுலும் அன்பினரைப்
புல்லி யிருக்கும் புனிதமளி புண்ணியனே.

அவன் ஆர் உயிர் உதிரமும் சிதறாது அமுதாய் உணும்—அவனுடைய அருமை உயிரையும் குருதியையும் சிந்தாதபடி அமுதமாக உண்ட;

கமல உந்தியன் ஆகிய மால் திரு மருகோனே—தாமரை போலும் கொப்பூழ் உடையவரான மாதவற்கும் திருமகட்கும் மருமகனே! ;

(தினகரன் ...... அழகோனே!)

தினகரன்—சூரியனும்; சிலைவேள—(கரும்பு) வில் ஏந்திய காமனும்; அருள் மாதவர்—அருளையுடைய சிறந்த ஞான சாதகர்களும்; சுரர்கள்—அமுதபான அமரர்களும், இந்திரனார்—(அமரர் உலகப் பேறுள) இந்திரப பெரியோனும; உலக அதிபர்—(ஆதி சேடன் முதலிய) நாக (உலகத்) தலைவர்களும்; திசைமுகன்—நால் திசை நோக்கிய நான்முகனும்; செழுமா மறையோர் புகழ் அழகோனே—செழுமை சிறந்த வேதியர்களும் புகழ்ந்து போற்றப் பெற்ற இன்ப அழகின் கொழுந்தாக இருப்பவனே!;

(திருமடந்தையர் .........பெருமாளே !)

திருமடந்தையர் நால் இருவோர் நிறை ஆகமொடு—செல்வியரான எண்வகைத் திருமாதாகள நிறைவு தோன்ற எழுந்தருளியிருக்கும் திருமாளிகைகளுடன்;

அம் பொனின் ஆலயம் நீடிய—அழகிய பொன்மயமான திருக்கோயிலில் எழுந்து நிமிர்ந்த;

சிவபுரந்தனில் வாழ் குரு நாயக—சிவபுரம் எனும் பதியில் வாழும் வழி காட்டும் குருநாதா!;

பெருமாளே—பெருமையிற் சிறந்த பெரியோனே!;

(மனம்......அருள்சேராய்!)

மனம் எனும் பொருள்—மனம் எனப் பெறும் தத்துவத்துடன்;

வான்—ஆகாயம்; அறைகால்—கனக்க வீசுகின்ற காற்று; கனல்—நெருப்பு; புனலுடன் புவி கூடியது—நீருடன் மண் (எனும் ஐந்து பூத தத்துவங்கள்) ஒருங்கு சேர்ந்து;

ஓர் உடல் வடிவு கொண்டு—ஒரு (தடித்த) உடலுடன் நுண்ணுடலும் தாங்கி;

அதிலே பதிமூன்றெழு வகையாலே—அதில் வகுதது வைத்த தொண்ணூற்றொரு தத்துவங்களால,

---

கற்றுவந்த நூனெறியிற் கந்தனினை யென்னுள்ளம்
பெற்றுவந்தேன் உள்ளகுறை பெம்மானீ ஓராயோ.

வரு சுகம் துயர் ஆசையிலே உழல் மதியை வென்று—மென் மேலும் தோன்றும் இன்ப துன்பங்கட்கு மூலமான, ஓயா வேட்கை யால் உழல்கின்ற சிற்றறிவைக் கட்டுப்படுத்தி;

பராபர ஞான நல்வழி பெறும்படி—நலம் சிறந்த பரஞான வழியையும். அபரஞான நெறியையும் (அடியேன்) பெறுமாறு;

நாய் அடியேனை நின் அருள் சேராய்—நாய் போன்ற கீழ்த் தரமான இந்த அடிமையை நின் திருவருளில் சிறக்கக் கலக்கச் செய்தருள், (எ—று).

## விரிவுரை

### சக்திபாலன்

சுத்த சைதன்யம், நாதாந்த ரூபம்; அது, வேதாந்த மோனம். அதன் இயறகையான அருள், தனியே ஒரு திருமேனி தாங்கியது; தன்னிலிருந்து உலகங்களைத் தந்தது பேரான அவ்வுருவிற்கு **ஜனனி** என்று பெயர். (ஜனனி—ஜனிக்க ஜனித்தவள்.)

இறப்பில் பிறப்பில் உயிர்கள், வீணான துன்பம் எய்தி வேசாறிப் போவன. அவைகளின் அயர்வை அகற்ற, தூய உயிர்களுள தொடர்பு கொள்வாளை, சங்கரி என்கிறார். (சங்கரி—இளைப்பை அகற்றுபவள்.)

"பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னும் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும்"

விருட்சம் எழுந்தது. அரும்பும் பூவும் ஆகி, பிஞ்சொடு காய் கனி நிறைந்த அதன் கிளைகளாகி, ஆன்மக் கிளர்ச்சி செய்வாளை, **'ஆரணி'** என்றார். (ஆரணம்—வேத சாகை.)

நடுக்கும் பிறவித் தாபம் தவிர்க்க நாரணி ஆயினள். (நாரணம்—ஜலார்ணவம்; நாரம்—நீர்; இது, நாராயணன் என்பதன் பெண்பால். புகழ், குணம், உருவம், ஒளி முதலியவைகளால் நாராயணனைப் போன்றவள் என்றபடி.)

இயற்கை செயற்கை இருவகை அழுக்கும் இல்லாதவள் ஆதலின், **விமலி** என்றார்.

தன்வயம்; தூயமேனி; இயற்கை உணர்வு; முற்றும் ஓர்தல்; இயல்பாகவே பாசம் இல்லாமை, பேரருள்; எல்லையிலா ஆற்றல்;

---

கண்டே உலகநிலை கற்றேற கலைபலவும்
விண்டே பயனிலையவ் ஓர்மொழிநீ விள்ளாயே.

அளவிலாப் பேரின்பம் எனும் எட்டுப் பண்புகள் நீக்கம் இன்றி நிறைந்தவ ளாதலின், 'எண்குண பூரணி' என்றார்.

எவர் செயலும், எவற்றின் இயக்கமும் சக்தியின்றி நிகழ்வ தில்லை யாகலின், காரணி என்றார்;

சிவனார் தேவியைச் சிவை என்றார். செம்மைத் தேவி என் பது பொருள்; அநந்த கல்யாண குணங்களை யுடையவள் எனவுமாம்.

எக்குலமும், எந்த இனமும், வாழும அவள் கரல் வழியாகி வருதலின், பரம்பரை என்றார்.

பர்வத மன்னர் புதல்வி பார்வதி எனப் பெறுவள்; (பர்வ சப்தம் உற்சவபேதம்; தசப்தம் திதிபேதம். ஆதலின், இவற்றிற்கு அதிதேவதை எனினுமாம். பர்வதங்கட்கு அதிதேவதை எனலும் ஒருவகை.)

குமரன் சக்திதரன் என்ற குறிப்பை, நவசக்தி மயமான பார்வதி அருள்பாலா என்பதில் பெற வைத்தார், ஆகிய என்ற சொல்லுருபை, சௌரியாகிய சங்கரியாகிய என ஒவ்வொரு பெயருடன் கூட்டி நோக்குவார் உள்ளம் குதூகலிக்கும்.

எண்குணம் ஆகிய என இயைத்து, தச நாம இறைவி தந்த தயா எனவும்,

பார்வதியையும் சேர்த்து, ஏகாதச நாம எம்பிராட்டி யருளிய குழந்தாய் என்று கொள்வதற்கும் இடமுண்டு.

## ஞானசக்திதரன்

புண்ணியம் செய்தனர். பொன்னுலகு எய்தினர். உயர்ந்த அமுதம் உண்டனர். அதனால் சுரர் எனும் பெயர் சொல்லி மகிழ்ந்தனர். (சுரை—அமுதம்)

பாவம் இடையே படபடத்தது. புனித தேவர்கள் அவுண ரிட்ட சிறையில் புகுந்தனர்.

சன்மார்க்கம் விரும்பி, சாதகர் ஆவர் மாதவர். அப் பெயர்க்கே பொருள் அதுதான். அசுர ஆட்சி, பாழும தடைகள் பல விளைவித்தன. அதனால், இன்பத தவசிகள் கீழ்நிலை எய்தினர்.

அசுர அரசு கால சாய்ந்தால, விடுதலை பெற்று சுரர் மேலுலகு எய்துவர். மாதவர் சாதனை மேல் நிலை எய்தும். (மேல் பெற

---

செந்தூரில் ஊமைமுனம் செப்பியதென்? அம்மொழியை வந்தென்முன் ஐயா நீ வாய்திறந்தால் ஆகாதோ.

என்பதை, சூரர் மேல் பெற, மாதவர் மேல் பெற என இரண்டிடத்தும் கூட்டிப் பொருள் கொளப் பெற்றது.)

இதற்கென்றே சிவபிரான்,

"நாயகம் ஆவது ஒருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைக்குக் கொடுத்தான்"

என்று குறிப்பொடு கந்த புராணம் கூறுகின்றது.

## இரட்சக சக்தியின் மருகன்

திதியைக் காசிபர் தேவியாகக் கொண்டார். அகால உறவால் அசுரர் பிறந்தனர். பிறந்தவருள் இரணியன் பெரியவன். வலிமை மிக்கவன்; வல்லான் வகுத்ததே வாய்க்கால். இது அவன் சிந்தனையில் எழுந்த செய்தி.

புனித ஈசன் ஒருவன் உளன் என்பது பொய். அது கோழைகள் ஏழைகள் கொள்கை. கடவுள் செய்தி கற்பனைக் கதை. இந்த நினைவு கொண்டு எழுந்தான். நானே கடவுள் என்று நடமாடினான். அப்பப்பா! எவ்வளவு பெரிய நாஸ்திகம்!

உலக மாதருடன் பாதலத்தில் உணவுண்டான். கடும் பகல் பொழுதைக் கற்பக நாட்டில் கழித்தான். இரவில் பிரம லோகத்தில் இருந்தான். சந்திர மண்டலத்தும், சூரிய மண்டலத்தும், செருக்கும் அவன் ஆணை சென்றது.

அவன் வலி, அவன் போகம், அவன் அதிகாரம், அடே அப்பா! என்றும் உலகில் எவர்க்கும் இல்லை. அது மட்டுமா! சிவ என்பார் தலையைச் சீவினான்; ஹரிஹரி என்பார் கழுத்தை அறுத்தான்.

அஞ்சினர் அமரர். நடுங்கினர் முனிவர். எவர் வாயும், ஓம் இரண்யாய நம: என்னும் ஒலியையே எழுப்பியது. பள்ளியில் மாணவர், இரணிய விலாசமே படித்தனர். இரண்ய கதா காலட்சேபம் எங்கும் எழுந்தது. வேத அத்யயனத்தை அந்தணர் விட்டனர். ஓயாது இரண்ய மகாத்மியமே ஓதலாயினர். அவ்வளவு பரிதாபம் அன்று இருந்தது. எதனால் இந்த அச்சம்?

ஆணாலும் பெண்ணாலும் அலியாலும் அழியான். எந்தப் பிராணியாலும் எந்த ஆயுதத்தாலும் ஒழியான். சாபம் எவர் தந்தாலும் சாகான். விண்ணிலும் மண்ணிலும், இரவிலும் பகலிலும் இல்லை மரணம் என்று இறுமாந்தான். இதனைத்தான் எவரும் அஞ்சினர். இந்த நாஸ்திக ஆட்சி, நாடெங்கும் நடந்தது.

---

*பரங்கிரிவாழ் செல்வர்க்கு நீயருளும் பண்புரையை*
*இரங்கிஎளி யேற்குரைப்ப(து) எற்றமெனல் எண்ணுயோ.*

பிள்ளைகள் நால்வர் அவனுக்குப் பிறந்தனர். இறுதி மகன் பிரகலாதன், பள்ளியில் அவன் படிக்க வந்தான். மாணவரும் ஆசிரியரும் இரண்யாய நம: என்றனர். இவன் ஓம் நாராயணாய நம ; என்றான்,

ஆசிரியன் அஞ்சினன். எவ்வளவு சொல்லியும், தன்னிலையில் மைந்தன் தளர்ந்திலன் ஆசிரியன் குலை நடுங்கினான். இரண்யனிடம் கூறினன்.

தந்தை மைந்தனை அழைத்தான். இனி அப்படிச் சொல்லாதே! அயலவர் கூறியிருந்தால், அவர் நாக்கை யறுத்திருப்பேன்! ஆம்.

கொடியனா அவன், உன் சிறிய தந்தையைக் கொன்றவன்; என்னையும் பலதரம் எதிர்த்தான். தாக்கிய அதிர்ச்சியைத் தாங்காமல, ஓடிக் கடலில் ஒளிந்தான். ஓயாது உறங்குவான். அத் தூங்குமூஞ்சியின் ஒடுக்கும் பெயரையா நீ ஓதுவது? இப்படி எவ்வளவோ சொன்னான். இணங்காது, சிரித்த மைந்தனைச் சீறினன்; இம்சைகள் பல செய்தான். பக்தி விஸ்வாசமும், சத்திய ஞானமும் பாலனைக் காத்தன.

எங்கேடா அத்திருமால்?

சாணில், அணுவின் நூறு பங்குள ஒன்றான கோணில், மேருக் குன்றில், இதோ எதிர் நின்ற தூணில் எங்குமுளன் எம் பெருமான் !

அப்படியா! ஆஹா! உம்பர்க்கும் உனக்கும் சகாயனை, இக் கம்பத்தில் காட்டு பார்ப்போம்? என்று இரணியன் கர்ஜித்தான்.

ஹஹ்ஹா ஹா ஹா! பெருநகை தூணி லிருந்து பிறந்தது.

யாரடா சிரித்தவன்? ஹரிதானா? நீருள் பதுங்கினை! நிலத்திலும் வந்தாயா? என் பொன் மாளிகை யுள்ளும் புகுந்தாயா? ஓடி வந்து தூணிலும் ஒளிந்தாயா?

போர் புரியும் திறம் இருந்தால், வெளியே புறப்படடா புறப்படு என்று, ஆத்திரம் கொண்டு தூணை அறைந்தான்.

பிளந்தது தூண். பிறந்தது சிங்கம். எட்டுத் திக்கிலும் அது அளவளாவி எழுந்தது. எவ்வளவு பயங்கரமான ரூபம்! பிரளய காலத் தீப் போன்ற பிடரிமயிர். யுக இறுதியில், மோதுவது போன்ற மூச்சுக் காற்று.

அதிரதத அவுணர்களை, உக்கிர நரசிம்மம் அழித்தது. கோர தாண்டவம் செய்து கொக்கரித்தது.

இப்போதாவது வணங்கி வாழலாம் என்றான் பிரகலாதன்.

---

சும்மா இருஎன் றருணகிரிக் குச்சொன்ன
அம்மா! அதனை அடியேற் கருளுதியோ.

இதன் தாள்களையும் தோள்களையும் தள்ளுவேன்! வாளை அதன் பின் வணக்குவேனடா! என்று எழுந்து கொதித்து எதிர்த்தான்.

மனித உருவும் விலங்குமான நரசிங்கத்தின் கணக்கில்லாத கைகள், அவனைக் கட்டிப் பிடித்தன. விண்ணும் மண்ணும் அல்லாத தொடைமேல் வைத்து, ஆயுதம் அல்லாத கைந் நகங்களால் அவனைப் பிளந்து, உதிரத்தோடு அவன் உயிரையும் பருகி, நானிலத்திற்கு விடுதலை தந்தது நரசிங்கம்.

அறத்திற்கு மாறாக எழும் அசுர வாழ்வு, இக்கதியைத் தான் அடையும் என்று சங்க நாதம் செய்தது தர்ம தேவதை. இவ் வரலாறு, எத்தனையோ நுட்பங்களைத் தன் கருவில் கொண்டுளது.

அவுணர் ஆட்சியை அழித்த முருகன், இரண்யாசுர நாஸ்தி கதகை அடர்த்த மாலுக்கு மருகன் என்பதை, எண்ணுந்தோறும் இதயம் நெகிழும்.

## வாசக சக்தி

பகலாட்சி பரிதிக்கு உரியது. கனத்த இருள் ஆட்சி காமனுக்குரியது. அருளாட்சி முனிவர்க்குரியது. புண்ணிய ஆட்சியர் பொன்னுடர். போக ஆட்சியன் தேவேந்திரன். தாங்கும் ஆட்சியர் நாகாதிபர். படைப்பின் ஆட்சியன் பிரமன். வேத ஆட்சி வேதியர்க்கு உரியது. இவர்கள் அனைவரும, முருகனது திருமேனிப் பொலிவு, திருவுளத்தழகு, திருவருட் பெருமை எனும் சௌந்தர்ய ஆட்சிகளைப் புகழ்ந்து துதித்துப் புளகிதம் எய்துவர்.

''புகழ அழகோனே'' எனவரும் பகுதியில் உள்ள செய்திகளை, எண்ணும் போதெல்லாம் உள்ளம் இன்புறும்.

## சிவபுர ஆட்சி

செல்வத்திரு, தான்ய லட்சுமி, தைர்ய மங்கை, வீர விளக்கு, வித்யாதேவி, புகழ்ப் புனிதை, வென்றி மகள, அரச மாது எனும் அட்ட லட்சுமிகள இருந்து குலாவும் திருமாளிகைகள், என்றும் சிவபுரத்தில் இருக்கின்றன. இனிய அப் பதியில் எழுந்தருளி யிருப்பவனே! குருப்பெயர் தாங்கினாக்கு வழி காட்டும் காயகனே! பெரும!

## அருளாட்சி செய்

தத்துவங்கள் 96; சிவ தத்துவங்கள் ஐந்தையும் விட்டால், எஞ்சிய தத்துவங்கள் 91. இவைகளால் மாறி மாறி உடல்

---

அடியேனுக் கந்த அருமைமறு வையுரைக்க
முடியாதே யென்னின், முதல்குருநீ ஆவாயோ

கொண்டேன். ஆசை பிறப்பை அளித்தது. ஆசை வழியே அவதி யடைகிற அறிவை, அடக்கி ஆள இருந்த வழி இரண்டு. ஒன்று அருள் நூற்களின் தொடர்பால் தோன்றும் அறிவு நெறி. அடுத்தது அருள் நெறி. இந்த இரண்டும் சித்திக்க,

பார்வதி பாலன; முருகன்; திருமருகன்; அழகன்; காயகன்; பெருமாள் எனும் ஆறு பெயராளா! உனது அருளில் அடியேன் அழுந்திய உறவு கொண்டிருக்க அருள் என்று, விநயம் கொண்டு விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

---

கட்டுரை 11.

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

*11.* உழைப்பே யோகம்:—

எவ்வகையிலும் கர்மம் செய்யவேண்டியது அவசியம் என்பதை பகவான் அறுதியிட்டுக் கூறிவிட்டார். செய்ய வேண்டிய கர்மத்தை ஒழுங்காகச் செய்து வருபவனே 'யோகி' எனப்படுவான்.

உண்மையான யோகி உடல், உள்ளம் இந்த இரண்டாலும் என்றும் சலியாது உழைத்து வருவான். அவனுடைய உழைப்புக்கு அர்த்தமும் நோக்கமும் உண்டு. கேவலம் ஒரு சாண் வயிற்றுக்காகவோ அல்லது ஒரு முழத் துணிக்காகவோ அவன் உழைப்பதில்லை. பொதுவாகக் கூறுமிடத்து அவன் உழைப்பது உடலுக்காகவல்ல. முற்றிலும் ஆன்மாவிற்கேயாகும். உழைப்பு உயர் நோக்கம் கொண்டதாயிருப்பின் அது யோகமேயாகும். அத்தகைய யோகத்தால் தான் சந்நியாசம் கை கூடும்.

எவ்வளவுதான் உழைத்தாலும் யோகி எதையுமே 'தான்' செய்யவில்லையென்றே உணர்வான். தன்னைக் கர்த்தாவென்று அவன் எப்பொழுதுமே எண்ணுவதில்லை.

---

பிள்ளைத் தமிழுரைத்த பேர்பகழிக் கூத்தர்க்கு
விள்ளுநுட் பெற்கு விளங்கவைத்தால் ஆகாதோ.

யோகியின் உழைப்பிற்கு அஸ்திவாரம் பயன் கருதாமை. அகம்பாவமற்ற தன்மையோடு அவன் காரியம் செய்கிருன்.

பயனை விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் எப்படியும் கருமத்தின் முடிவில் பயன் ஏற்படத்தான் செய்யும். இலாபமோ அல்லது நஷ்டமோ, வெற்றியோ அல்லது தோல்வியோ, நன்மையோ அல்லது தீமையோ இரண்டிலொன்று கருமத்தின் பயனுகக் கிடைத்தே தீர வேண்டும்.

கருமத்தின் இறுதியில் "சாந்தி" என்ற பெரும்பயன் யோகிக்குக் கிட்டுகிறது. சாதாரண மனிதனுக்கு அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் வெவ்வேறு விதமான பயன் கிடைக்கும். ஆனுல் யோகியோ எந்தக் காரியம் செய்தாலும் 'சாந்தி' என்ற ஒரே பயனைத்தான் அடைகிருன்.

பயன்கள் வேறுபடுவதற்கும் மனிதனுக்கு அவை திருப்தியைத் தராமலிருப்பதற்கும் காரணம் அபிலாஷைகளே. பற்றற்றுப் பணிபுரியும் பொழுதுதான் வேறுபாடற்றதும் நிலையானதும் திருப்தியைத் தரத் தக்கதுமான பயன் கிடைக்கும்.

உடலுக்காக உழைப்பவன் பாமரன். ஆன்மாவிற்காக உழைப்பவன் யோகி. இந்த இடத்தில் 'ஆன்மா' என்ற சொல்லுக்கு 'உயிர்' அல்லது 'ஜீவன்' என்ற பொருள் கொள்ளக் கூடாது. வாஸ்தவத்தில் ஆன்மா உயிரினின்று வேறுபட்டதாகும். உயிருக்கு குறிப்பிட்ட ஒரு சமயத்தில் ஒரு உடல் மட்டுமே உண்டு. மேலும் உயிரானது எப்பொழுது ஏதாவது ஒரு உடலைச் சார்ந்திருக்கும். ஆனுல் ஆன்மாவானது எந்தவித பந்தமுமின்றி சுதந்திரமாகவும் ஸ்வயம்பிரகாசமாகவும் விளங்கக் கூடியதாகும். ஏனையவற்ருேடும் ஆன்மா சம்பந்தப்பட்டாலும் அது அவற்ருல் கட்டுப்படுவதில்லை.

(குறிப்பு—ஆன்மா—உயிர் சம்பந்தமான என்னுடைய இவ் விளக்கம் சாஸ்திர சம்பந்தமானதென்று முற்றிலும்

---

திருப்போரூர் வாழும் சிதம்பரர்க்குத் தேவேநீ
உருப்போடச் சொன்னதியான் ஓர்ந்துகொள ஓதாயோ.

நிச்சயமாகக் கூறமுடியவில்லை. பிழையிருப்பின் பெரியோர்கள் மன்னிப்பார்களாக.)

உழைப்பிற்குப்பின் மனிதனுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. ஆனால் யோகியின் உழைப்புக்கு ஓய்வு தேவையில்லை. ஏனென்றால் அவனுடைய உழைப்பிற்கு ஆரம்பம் என்பதோ முடிவு என்பதோ கிடையாது. மேலும் இடையருது உழைத்துக் கொண்டிருந்தும்கூட அவன் நிரந்தரமான ஓய்வு பெற்றவன் யோகியின் அகராதியில் ஓய்வு என்பதற்கு சாந்தி என்பதே பொருள்!

தற்கால மனோ தத்துவ வாதிகளே கூட ஓய்வு என்பது வேலையின்றியிருத்தல் அல்ல என்றும், வேலை மாற்றமே தான் என்றும் கூறுகிறார்கள் அல்லவா? அது யோகியின் விஷயத்தில் முற்றிலும் உண்மை.

சரி-தவறு, பாவம்-புண்ணியம், நன்மை-தீமை என்று பகுத்துப் பார்க்க வேண்டிய அவசியம் யோகிக்கு இல்லை. ஏனென்றால் சரியல்லாத எதையும் அவனால் நினைக்கவோ செய்யவோ முடியாது. அவனுடைய செயல்கள் யாவும் தோஷமற்றவை. சுகம் வேண்டுமென்று அவன் உழைப்பதில்லை, ஆனால் இடையருது சுகம் அவனை வந்து அடைகிறது.

லட்சியவாதி நினைக்கும்போது, சிந்தனையாளன். உழைக்கும்போது யோகி. பார்க்கும்பொழுது சமதர்சனம் உடையவன். செய்தும் செயலற்ற நிலையை அடையும் பொழுது அவனே சந்நியாசி.

பொருளால் கிடைக்கும் இன்பம் குறைபாடுடையது மேலும் வாஸ்தவத்தில் அது துன்பத்தையே கொடுக்கக் கூடியதாகும் ஆகவே அறிவுடையோன் அத்தகைய கேவலமான பொருளின்பத்திற்காக உழைக்க மாட்டான். புறப்பொருள்களால் அவன் சுகம் பெற முடியாது.

பாமரன் கருமம் செய்வதற்கு உழைக்கவே வேண்டும். ஆனால் யோகியோ கருமம் செய்யாமலே உழைக்கிறான். உழைக்காதிருந்தும் கருமம் செய்கிறான்.

---

சீர்சிறந்த செல்வக் கதிர்காமச் செங்காட்டில்
நீர் இருந்த (து) உன்னியுளம் நீராளம் ஆயதுவே.

கை கால்கள், கண், காது போன்ற கருவி கரணுதிகளால் நாம் கருமம் செய்தாலும் பயனே அனுபவிப்பது நமது மனமேதான். யோகியோ மனத்தை அறிந்து அதை ஆட்கொண்டவனுமாதலால் புறக்கருமங்கள் (வெளிப்படையாகத் தெரியும்படி) செய்யாமலே அவன் உழைப்பாளியாகவும் பயன் பெற்றவனுகவும் இருக்க முடியும். உழைப்பது மனிதன்தான். அவனுடைய சரீரமல்ல. சரீரம் இயங்குவதற்கு மனமே உழைக்க வேண்டும். மனம் உழைப்பதற்கு மனிதன் உழைக்க வேண்டும். அதாவது சிந்திக்க வேண்டும். எனவே சிந்தனைதான் உழைப்பு என்று கூறத்தகும்.

சிந்தனை சரியா யிருந்தால்தான் மனிதன் சரியாக உழைக்க முடியும். சரியாக சிந்திக்கத் தெரிந்தவன் ஆன்மீக லட்சிய வாதியே. எனவே அவன்தான் சரியான உழைப்பாளி. அவனுடைய உழைப்பிற்கே யோகம் என்று பெயர்.

பாரதப் போரும், கண்ணனுடைய உபதேசமும், அர்ஜுனன் இறுதியில் பெற்ற தெளிவும் மகத்தான யோகமுமாகும்.

உழைப்பு ஒன்றைப் பெறுவதற்காக அளிக்கப்படுவதல்ல, எல்லாவற்றினின்றும் விடுபடுவதற்காகவேதான்! ஏனென்ருல் ஒன்றைப் பெறுவதிலே சுகம் இல்லை, விடுபடுவதில் தான் சுகம் உள்ளது உலகம் என்ற சிறையிலிருந்து விடுபடுவதே மோட்சம் ஆகும். அதுவே சுகம். அந்த சுகத்திற்குத்தான் கீதை பாதை காட்டுகிறது.

(தொடரும்)

# 'முனிவர் காட்டிய முதல்வன்'

(சி. குமாரஸ்வாமி)

(பக்கம் 448 தொடர்ச்சி)

"என்ன அப்பனே? நமது பிரயாணத்தைத் துவக்கலாமா?"

"ஆஹா, நான் இப்போதே தயார் சுவாமி."

---

"சரி, நட."

(இருவரும் நடந்து செல்கிறோம்.)

"நாம் பார்த்த அந்த வீரன் யார்? அவன் தங்கியுள்ள ஊர் எது? என்று தெரிந்துகொண்டிருப்பாய் என நினைக்கிறேன்"

":அவன் யார் என்று தெரிந்துகொள்ளாமல் இருக்க முடியுமா சுவாமி: அவன் தங்கியுள்ள ஊர், அவன் விரும்பித் தங்கும் பல ஊர்களில் முதலாவது இடம் என நினைக்கிறேன். (திருப்பரங்குன்றம்). சரிதானே சுவாமி."

"ஆம். நீ சொல்வது முற்றிலும் சரியே."

"மணிச் சத்தம் கேட்கிறதே என்ன சுவாமி."

"பழமொழி தெரியாதா உனக்கு—யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே—அதோ பார் யானை வருகிறது. அதன் நெற்றியிலே அங்குசத்தின் நுனி பதிந்த வடு இருக்கிறது. அது மட்டுமா, வாடாத பொன்னரி மாலை பட்டத்தோடு அசைகிறது. மணிகள் மாறி மாறி ஒலிக்கின்றன. இந்த யானை எவ்வளவு வேகமாக நடக்கிறது பார்த்தாயா? காற்றைவிட வேகமான நடை. யமனையும் மிஞ்சக்கூடிய வலிமையுடையது."

"யானையின்மீது அமர்ந்திருப்பவரின் கிரீடத்தைப் பாருங்கள் சுவாமி. அது கண்ணைப் பறிக்கிறது. ஆஹா! ஜெகஜ்ஜோதியாக இருக்கிறது. இவருக்கு ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் உள்ளன. இவர் யார்? எதற்காக இத்தனை முகங்களும் கைகளும்?"

சொல்கிறேன் கேள்: இவன், நாம் முன்பு பார்த்த முதல்வனேதான். பல இடங்களில் பல்வேறு உருவில் காட்சி தருவான். அவன் அணிந்திருக்கும் கிரீடம் நல்ல கிரீடம், அதில் தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி என்னும் ஐந்து உறுப்புகள் அமைந்துள்ளன. நல்ல வேலைப்பாடுகள் செய்யப்பட்டது. பொன்னால் செய்யப்பட்ட இந்த கிரீடத்தில் மாணிக்கங்கள் ஒளி வீசுகின்றன.

---

வந்த பிறவிதனில் வாழும் குறிப்புணர்த்திச்
சிந்தையினில் நீயிருக்கும் செல்வநிலை ஓர்ந்தேனே.

அவனது முகங்களுக்கு இருபக்கமும், சந்திரனைச் சூழ்ந்து ஒளிவிடும் நட்சத்திரங்களைப்போல, பொன்னு லாகிய மகரக் குழைகள் பிரகாசிக்கின்றன.

குற்றமில்லாத நோன்புகளையுடைய தமது தவத் தொழிலை முடிப்பாருடைய (தவசிகள்) நெஞ்சிலே பொருந்தி எழுவன, இந்த முதல்வனுடைய ஒளியும் நிறமும் பொருந் திய முகங்கள்.

இவனது ஆறுமுகங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலைச் செய்கின்றன.''

''அத்தொழில்கள் யாவை சுவாமி?''

'அவசரப்படுகிறாயே. அவற்றைப் பற்றித்தானே சொல்லப் போகிறேன் இப்போது';

அவனது முதல் திருமுகமானது, பேரிருளாலே மறைக் கப்பட்ட உலகம் குற்றமில்லாமல் விளங்கும்பொருட்டுப் பல சுடர்களைத் தோன்றச் செய்கிறது.

இரண்டாவது முகம், தன்னிடம் அன்பு செய்தவர்கள் வாழ்த்த அதற்குப் பொருந்தி, அவர்க்கு இனிதாக நடந்து, விருப்பத்தோடு மகிழ்ந்து வரங்களை அளிக்கின்றது.

மூன்றாவது முகம், வேத மந்திர முறைப்படி, சம்பிர தாயங்களினின்றும் தவறாத அந்தணர்களுடைய யாகங்களை இடையூறு நேராதபடி காத்து நன்கு நிறைவேற்றித் தரும்.

நான்காவது முகம், நூல்களாலும், ஆசிரியர்களாலும் விளக்கமுறாமல் எஞ்சிய பொருள்களை, ஞான வேட்கை யுள்ளவர்கள் இன்புறும்படியாக, ஆராய்ந்து உணர்த்திச் சந்திரனைப்போல திசையெல்லாம் விளக்கும்.

ஐந்தாவது முகம், தன்னை எதிர்ப்பவர்களை அழித்து, மிக நீண்டு செல்லும் யுத்தங்களை முடித்து, கோபங் கொண்ட உள்ளத்தோடே கள வேள்வியைச் செய்கிறது.

ஆறாவது முகம், குறவருடைய மகளாகிய, கொடி போன்ற இடையையுடைய பெண்ணோடு (வள்ளிதேவி) இன்பம் அடைந்து மகிழ்கிறது. இவ்வாறு ஆறுமுகங் களும் தம் தம் தொழிலைச் செய்கின்றன.

---

தஞ்சமென நின்னுடைய தாளடைந்த நாயேன்
அஞ்செழுத்தை ஓதியுளன் ஆறெழுத்தும் தாராயே.

அவனது மார்பிலே பொன் ஆரம் புரளுகிறது. அது அகன்ற பெருமையுடைய மார்பு. அதில் மூன்று வரிகள் தோளளவும் சென்றுள்ளன. உத்தம ஆடவருக்குரிய இலக்கணம் அது. சிவந்த வரிகளை மார்பிலிருந்து வாங்கிக் கொண்டு பெருமையுடன் விளங்குகின்றன அவன் தோள்கள். கண்டார் உள்ளத்தை வசப்படுத்தி, கழுத்தருகில் உள்வாங்கி, மேலே நிமிர்ந்து அழகு, ஒளி, புகழ், வீரம் என்னும் நான்கும் பொருந்திய பன்னிரண்டு தோள்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன பார்த்தாயா?

ஏன் அப்படியே அசையாமல் நின்றுவிட்டாய்?"

"அவனது ஒளி பொருந்திய அழகு என்னைக் காந்தம் போல் இழுத்து நிறுத்திவிட்டது. பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்போ லுள்ளது சுவாமி."

இனி, அவனது பன்னிரு கைகள் செய்யும் வேலைகளைக் கூறுகிறேன் கேள்.

வானத்தில் செல்லும் சூரியன் ஒளியை வீசுவதோடு வெம்மையையும் விடுகிறான். அந்த வெம்மையைச் சில முனிவர்கள் தாங்கிக்கொண்டு சூரியனுடனே பிரயாணம் செய்கின்றனர். அவ்வாறு அம்முனிவர்கள் செய்ய அவர்களுக்குப் பாதுகாவலாக ஒரு கை ஏந்தியது. அதற்கிணையான மற்றொரு கை இடையிலே வைக்கப்பட்டுள்ளது.

ஒரு கை அங்குசத்தைச் செலுத்தி, மற்றொரு கை அழகான ஆடையை உடுத்த துடையின்மீது கிடக்கிறது.

இரண்டு கைகள், வியப்பையும் கடுமையையும் உடைய கேடயத்தையும், வேலாயுதத்தையும் சுழற்றுகின்றன.

ஒரு கை, திருமார்பில் மோன முத்திரையோடு விளங்க, அதற்கிணையான கை மாலையோடு சேர்ந்து அழகாக விளங்குகிறது.

ஒரு கையானது, கீழே நழுவுகின்ற வளையோடே களவேள்விக்கு முத்திரை கொடுக்க, ஒரு கை வேள்விப் பூஜைக்குரிய இனிய ஓசையையுடைய மணியை ஒலிக்கச் செய்கிறது

---

ஏட்டினில் ஆறெழுத் தென்று மிருந்தாலும்
நாட்டத்தால் காட்டாயேல் நானுணரல் ஆகாதே.

ஒரு கையானது நீல நிற வானத்திலிருந்து மிக்க மழையைப் பொழியும்படியாகச் செய்ய, மற்றொரு கை தேவப் பெண்களுக்கு மணமாலை சூட்டுகிறது.

இவ்வாறு ஆறு திருமுகங்களுக்கு ஏற்ற வகையிலே பன்னிரு கரங்களும் தொழில் புரிகின்றன.''

"சுவாமி, தங்களையும், தாங்கள் கூறியவற்றையும் என்றும் மறவேன். ஆமாம், இசைக் கருவிகள் முழங்குகின்றனவே அவை யாவை? இப்போது நம் முதல்வன் எங்கு செல்கிறான்?"

''அவன் நாம் செல்லுமிடத்துக்குத்தான் செல்கிறான். தேவ துந்துபிகளே (வானத்து இசைக் கருவிகள்) முழங்குகின்றன. திண்ணிய வயிரத்தையுடைய கொம்புகள் உச்ச ஒலியோடு ஒலிக்க, சங்குகள் முழங்க, இடியைப் போன்ற முரசு முழங்க, பல பீலிகளையுடைய மயில் அகவ, அவன் ஆகாயமே வழியாக, உலகமெல்லாம் போற்றும் சிறப்பையுடைய திருச்சீரலைவாயை (திருச்செந்தூர்) நோக்கிச் செல்கிறான். அது அவன் விரும்பித் தங்கும் இடங்களில் இரண்டாவது.

"நாமும் இப்போது, அந்த முதல்வன் விரும்பித் தங்கும் திருச்சீரலைவாய்க்கு வந்துவிட்டோம் சுவாமி. அதோ பாருங்கள் அவரும் நமக்கு முன்னாலே வந்து நமக்காகக் காத்திருக்கிறார்."

"அவனைப் பார்த்துவிட்டு, இங்கே சில நாட்கள் தங்கிப் பிறகு அவனது மற்றோர் ஊருக்குச் செல்லலாம்."

"சரி சுவாமி"

(தொடரும்)

# ஆறுமுகம்

**(கி. வா. ஜ.)**

உலகப் படைப்பில் பல தத்துவங்கள் மாயையின் விரிவாக அமைந்துள்ளன. அம்மாயை சுத்த மாயை, அசுத்த

---

எல்லா நலமும் எளிதினுறும் நீளய்திற்
பொல்லா வினையனைத்தும் பொன்றுமன்றே புண்ணியனே.

மாயை, பிரகிருதி மாயை என்று மூன்று வகைப்படும். உயிர்க்குலங்கள் தத்தம் வினைகளுக்கு ஏற்றவகையில் இன்ப துன்பங்களை நுகர்ந்தும், புண்ணிய பாவங்களை இயற்றியும் பிரபஞ்சத்தில் உழலுகின்றன.

தத்துவங்கள் ஒடுங்கும்போது மாயையும் ஒடுங்கிவிடும். மாயை ஒடுங்குவது வேறு, மாயையின் பிணிப்பிலிருந்து விலகுவது வேறு; மழை நிற்பது வேறு; நாம் குடை பிடித்துக்கொண்டு மழையில் நனையாமல் இருப்பது வேறு. சிவஞானம் பெற்றவர்கள் தம்மளவில் மாயையின் பிணிப்பிலிருந்து விடுபடுகிறார்கள்.

ஆன்ம தத்துவங்கள் பிரகிருதி மாயையிலிருந்து தோன்றுவன. பெரிய மாயைகளாகிய சுத்த மாயை அசுத்த மாயை என்னும் இரண்டையும் களைந்து சுத்த சிவமாக நிற்கும் முருகப் பெருமான் பிரகிருதி மாயையினின்றும் நம்மை ஏறவாங்கி அருள்செய்யும் வலிமை பெற்றவன் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. 'அவ்வளவு பெரியவன் உபதேசம் செய்திருக்கிறான். அவனால் பெரிய தடைகளே நீங்கிவிடும். அப்படியிருக்க இந்தப் பிரகிருதி மாயைக்கு அகப்பட்டு வேசாறலாமா? என்று எண்ணுகிறார் அருணகிரியார்.

மகமாயையைக் களைந்திடும் வன்மையை உடைய பிரான் மூகம் ஆறும் மொழிந்தானும். ஆறு முகங்களாலும் உபதேசம் செய்தான் என்று பொருள் கொள்வது ஒரு வகை 'முகம் ஆறின் தத்துவத்தையும் எனக்கு அருள் செய்தான்' என்று கொள்வது சிறப்பு

ஆறுமுகங்களின் தத்துவத்தை நூல்கள் பலபடியாகப் பேசுகின்றன. முருகன் ஆறுகுணங்கள் நிரம்பியவன். ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு இயல்புகளையும் பகம் என்று குறிப்பார்கள். இந்த ஆறு குணங்களை உடைமையால் பகவான் என்ற பெயர் அமைந்தது. முருகன் இந்த ஆறு இயல்புகளின் விளைவான செயல்களைத் தன் ஆறு திருமுகங்களாற் செய்கிறான்.

---

மனிதமதி தெய்வ மதியாகி வாழப்
புனிதவுருக் காட்டிப் புனிதநிழல் காட்டாயே.

யனிதனுடைய உடம்பில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த ஆறிலும் இருந்து யோகியர்களுக்குத் துணை செய்கிறவன் அப்பெருமான். ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகனாக இருந்து அதற்குமேல் உருவம் கரந்த பராபரப் பொருளாக அவன் நிலவுகிறான்.

''நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீகாண் எனு அனைச்சொல்—அருள்வாயே''

என்று திருப்புகழில் அருணை முனிவர் இதனைப் புலப்படுத்துகிறார்.

சக்தியின் முகம் ஒன்றும் சிவபிரான் முகம் ஐந்துமாக ஆறு திருமுகங்கள் அமைந்தன என்றும் கூறுவர். முருகனிடம் சக்தியின் பகுதியும் சிவபிரான் பகுதியும் இணைந்து விளங்குகின்றன என்ற கருத்தையே இது புலப்படுத்தும். சிவபிரான் சச்சிதானந்த மயமானவன். அம்பிகை அருள் மயமானவள். என்றும் நிலைபெற்றதாய், ஞானமே உருவமாய், இன்ப வடிவாய் இருப்பதால் சச்சிதானந்தன் என்று சொல்கிறோம். அந்த மூன்றும் அவனுடைய தனித் தன்மையையும் பரம்பொருளென்ற நிலையையும் காட்டுவன. நிலையற்ற வாழ்வும் சிற்றறிவும் துன்ப அநுபவமும் உடைய ஆருயிர்களுக்கு சச்சிதானந்த உருவான இறைவனோடு ஒன்றுபடும் நிலை கிடைத்தால் அவ்வுயிர்களும் நிலைபெற்ற வாழ்வும் முழுஞானமும் இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்தமும் பெறுவார்கள். அப்படிப் பெறுவதற்கு அவன் அருள வேண்டும்.

செல்வன் சிவபெருமான் ஏழை ஆன்மா. செல்வன் ஏழைக்கு அருளத் தூண்டுவது ஈகைக் குணம். அது இல்லாவிட்டால் செல்வனிடம் செல்வம் இருக்கும்; ஏழையினிடம் வறுமை இருக்கும். அளவிலாச் செல்வனிடம் வறுமை என்றும் சேராது. ஆனால் வறியவனிடம் உள்ள வறுமை போகச் செல்வம் சேரலாம். அதற்குச் செல்வனிடம் ஈகைப் பண்பு உண்டாக வேண்டும். சிவபெருமானிடம் உள்ள சச்சிதானந்தத்தை உயிர்கள் பெற அவன் அருள் இடை நின்று கூட்டுவிக்க வேண்டும் அந்த அருளே சக்தி.

---

எவ்வுருவும் நீயென்றே எணணியிறு மாந்தவளைச்
செவ்வுருவம் செய்யடியைச் சென்னிமிசை வையாயே.

பரா சக்தியின் அருளும் சிவபிரானின் சச்சிதானந்தமும் இணைந்தவன் முருகன். அருள் மிகுந்த திருக்கோலம் பூண்டவன் அவன். சமைக்குமிடம் ஒன்றும் உணவு வழங்கும் இடம் ஒன்றும் தனித்தனியே இராமல் இரண்டும் ஒருங்கே வாய்ந்தது போல அமைந்த மூர்த்தி முருகன்.

ஐந்துமுகம் பெற்ற இறைவன் வழங்கிய கருணையைப் பின்னும் பெருக வழங்கும் பொருட்டு ஆறுமுகத்தோடு தோன்றினான் முருகன். அதனால் அம்முகங்கள் "கருணை கூர்முகங்கள்" என்று கச்சியப்ப சிவாசாரியார் பாடுகிறார். கூர்தல்—உள்ளது சிறத்தல். முன்பு உயிர்களுக்குக் கருணை பாய்ந்தது. ஆறுமுக மூர்த்தி தோன்றியபின் அது பின்னும் பெருகிப் பாயலாயிற்று.

முருகன், "கருணை மிகுதியினாலே பக்தர்களின் பக்தி ஒன்றையே கண்டு, பிற பக்குவங்களைப் பாராமல் அருள் செய்ய ஆறுமுகம் படைத்து அவதாரம் செய்திருக்கிறேன். ஆதலின் நீ எளிதிலே என் அருளைப் பெறலாம்" என்பதை அருணகிரிநாதருக்குப் புலப்படுத்தினான்.

---

**தேவி தாஸர்கள்—23**

# மத்ர குமாரி

**(ரசபதி)**

மத்திர தேசத்தில் ஒரு மன்னர்; அவர் பெயர் அஸ்வபதி. மனையாள பெயர் மாளவி. எல்லா நலமும் இருந்தது. மைந்தர் இல்லை என்ற மனக் குறையும் இருந்தது. தானம் செய்தனர்: அசற்கான தருமம் செய்தனர். வரத சிவததை வழிபட்டனர். மகேச பூசை நடத்தினா. வாழ்விக்கும் சிவ புண்ணியம் வளர்ந்தது.

ஒரு நாள நாரதர் வந்தார். இது அவர்கள் எதிர்பாராத செய்தி. மகிழ்ந்தது மனம். விரைந்து எழுந்தனர். வரவேற்றனர். பாத பூசை செய்தனர். பாராட்டினர். மன்னர் மனக் குறையை மாதவர் அறிந்தார்.

---

உள்ளம் திருத்தி ஊன்றி அருள்விதையைக்
கள்ளமிலா வான்பயிர்கள் காணக்கண் காட்டாயோ.

வேந்தே! வாய்மையை இதயத்தால் வழிபடு! அருள் புரிவள் அந்த அன்னை. வருகிறேன் என்று வழி நோக்கிச் சென்றார்.

*　　　　*　　　　*　　　　*

ஆனந்தவல்லியைத் தம்பதிகள் பல காலம் ஆராதித்தனர். இதய பிரார்த்தனை, இறைவியை ஈர்த்தது. பசுமை ஒளி எழுந்து படர்ந்தது. புன்னகை திருமுகத்தில் பொலிய, ககன வடிவி காட்சியாயினள்.

கண்ட தம்பதிகள் களித்தனர். வினயம் கொண்டு எழுந்தனர். விழுந்து வணங்கினர். கூப்பிய கைகளால கும்பிட்டனர்.

எம்பிராட்டி! தாயே! என்று அஸ்வபதி ஏத்தினர். அம்பா! தேவ தேவி! என்று அரசி வீரிட்டாள்.

மன்னா! நீ அருமை மைந்தன் வேண்டுமென்று அவாவினை! மாளவி, விரத சாரணியான மகளை விரும்பினள். தூய மகள் முதலில் தோன்றுவள்; அவள் மூலம், நினைத்தவை உங்கட்கு நிறைவேறும்.

தேவ கானமாக இருந்தது தேவி குரல். பனிச்சென்று மறைந்தது பசுமை ஒளி.

கனவுபோல் வந்த காட்சியை எண்ணினர். கண் மழை சிந்தினர். திசை நோக்கித் தொழுதனர்.

*　　　　*　　　　*　　　　*

அரசி கரு எய்தினள். உருண்டு பத்து மாதங்கள் ஓடின. பெண் குழந்தை ஒன்று பிறந்தது.

சாவித்ரி தேவி அருளால் பிறந்த மகட்கு, சாவித்ரி என்றே பெயரிட்டனர்.

வளர்பிறைபோல் மகள் வளர்ந்தாள். கற்பன கற்றாள். பருவம் எய்தினள் அந்தப் பாவை.

*　　　　*　　　　*

மாதவ நாரதர், மற்றொரு நாள் வந்தார். வரவேற்ற தம்பதிகள், மகளுடன் வணங்கினர்.

அஸ்வபதி! யார் இம் மகள்?

ஸ்வாமீ! உமாதேவி அருளால் உதித்த மகள். இவள் பெயர் சாவித்ரி. அன்று குழந்தை இல்லை என்ற குறை. அழகின் கொழுந்து; சிறந்த கலைச் செல்வி. அறிவின் பிழம்பு ஆன இவட்குத் தக்கவன் எங்குளனோ? இந்த ஏக்கம் இப்போது!

---

பள்ளத்திற் பாயும் பயனுறு நீர்போல்நீ
உள்ளம் குடிபுகுந்தே ஊமையெழுத் தோதாயோ.

மன்னா! உலக வாழ்க்கையில், என்றும் கவலை யிருப்பது இயல்பு. வீணான உங்கள் கவலையை விட்டு விடுங்கள்! அவள் யாரை விரும்புகிருளோ அவனிடமே ஒப்படைத்து விடுங்கள்!

ஸ்வாமி! நாண நாட்டம் கொண்ட நங்கை, இதற்குள் எவரையும் எண்ணி யிருக்க மாட்டாளே என்ருள் அரசி.

மாளவீ! காலம் தன் கருமத்தைச் செய்யும். அதை அறிந்து மகிழ்வதுதான் அறிவுடைமை. இம் மகள், சாவித்ரி தேவியின் அருளால சகத்தில் உதித்தவள். அத்தேவியின் திருவருள், இனிது இவளில் இருக்கும். மங்கை அவள் கருத்திற்கு மாறுபடல் ஆகாது. பாவையை எதற்கும் கேட்டுப் பார்!

நாணித் தலைகுனிந்தாள் நங்கை.

செல்வியை நோக்கி அரசி சிரித்தாள்.

குழந்தையைத் தனியே வைத்துக் கேள் என்ருர் அரசர்.

அருமை மகளை, தாய் அழைத்துச் சென்ருள். அந்தப்புரத்தில், தாயும் மகளும் எதிரெதிர இருந்தனர். தான் பெற்ற செல்வம், தலை குனிந்தே இருப்பதை யறிந்த பெற்றவள் மனம் பெரிது மகிழ்ந்தது. கன்னத்தை வருடிய கை விரல்களை, தன் கன்னத்தில் அழுத்தி நொடித்தாள். அதன் பின், தன் மகள் திருமுகத்தைத் தாய், தன் கையால் நிமிர்த்தினள்.

அம்மா! உன் நலத்தில் கண்ணும் கருத்தும் உடையவள் நான். உள்ளக் கண் கொண்டு, எதையும் முனிவர்கள் உணர்ந்து உரைப்பர். குறிப்பாக நாரதர் கூறிய பிறகுதான், அன்றி அதை நானும் உணர்ந்தேன், உண்மையைச் சொல். தாய்க்கு ஒளிப்பது தகுதி யல்ல. எவரையேனும் நீ விரும்பியது உண்டா ?

அம்மா! இளம் பருவத்தில் ஒரு நாள் பூஞ்சோலையில் இருந்தேன். ஒரு சிங்கம் எங்கிருந்தோ வந்து, என மேல் பாயப் பார்த்தது. எதிர்பாராத இதனுல், அதிர்ந்தது மனம். அஞ்சி அலறினேன். ஓடித் தாதியர் ஒளிந்தனர். தனித்தேன்; தடுமாறித் தவித்தேன்.

விர் என்று வந்த ஒரு கணை, பாய இருந்த சிங்கத்தின் வயிற்றில் பாய்ந்தது. பயங்கர சிங்கம், துள்ளித் துடித்தது; வேதனைப் பட்டு விழுந்து இறந்தது.

கண்டேன். வியர்த்தது உடல். செயலற்று நின்றேன். விட்ட கணையால் சிங்கத்தை வீழ்த்திய வீரர், வில்லேந்திய கோலத்தில் எதிர் வந்தார். காணத்தக்க அவரது கம்பீர தோற்றம், என கருத்தில் புகுந்தது.

---

குணக்குன்றும் அன்னவரைக் கூடியடி யேனுய்ய
இணக்கி அருள்புரிநீ ஏறுமயில் எந்தாயே.

ஆணழகர் அவர் என் அருகில் வந்தார். அரண்மனை வரை, துணை வருகிறேனே என்றார்.

உடல் புளகித்தது. ஆம். அதுதான் நல்லது என்றது உள்ளம். நாணம் எழுந்து நடம் புரிந்தது. அதனால், வார்த்தை சொல்ல வாய் மறுத்தது. இதற்குள் ஓடிய தாதியர் ஒன்று கூடினர், என்னை நெருங்கினர்.

அழைத்துச் செல்லுங்கள் என்று, அவர்கட்கு அறிவித்தார். அவ்வளவுதான், லாவகமாகப் பரிமேல் ஏறினர். மின்னல் என ஓடி மறைந்தது குதிரை. அவர் சாளுவநாட்டு அரச குமாரர் என்றனர் தோழியர், மகிழ்ந்தது மனம். இதை எவர்க்கும் அறிவிக்க வேண்டாம என்று, உடனிருந்த தாதியர்க்கு உணர்த்தினேன். அன்று முதல் அவர் உருவம், நீங்காது என் மனத்தில் நிழலிடுகின்றது அம்மா!

அப்படியா செய்தி! சரி சரி. சாவித்ரி! எழுந்து வா. மாதவரும் மன்னரும், நம்மை எதிர்நோக்கி யிருப்பர் என்றாள் அரசி.

தாயும் மகளும் வந்தனர்,

* * *

என்ன செய்தி என்றார் அரசர். உள்ளதை மகாராணி உரைத்தாள். முனிவர் முறுவல் செய்தார்.

ஸ்வாமி! சாளுவதேச அரசகுமாரன் பெயர், சத்யவான் என்று அறிவேன். பெயர்க்குத் தக்க பெருந்தன்மை யுடையவன் தானே அவன்?

எல்லா வகையிலும் நல்லவன் தான், மாதா பிதாக்களை மறவாதவன். சிறந்த தீர்த்த யாத்திரை என்று சென்றான். சமயம் பார்த்து, அவன் நாட்டை, எதிரிகள் அபகரித்தனர். யாத்திரை முடிந்தது திரும்பினன். விவரம் உணர்ந்தான். வேதனை படைந்தான். ஓடினன். காட்டில் பெற்றோரைக் கண்டான். அவர்கள் அவனைக் கட்டுப் படுத்தினர். எதிரிகளை வெல்லும் காலத்தை எதிர்நோக்கி யிருக்கிறான். அவனைப்போல், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று அறிந்து அநுட்டிப்பவர்கள் இல்லை.

என்ன செய்யலாம்! அவன் ஆயுளோ, இன்னம் ஒரு ஆண்டு வரைதான் இருக்கிறது.

அரச தம்பதிகள் மனம் அதிர்ந்தது.

சாவித்ரி! இந்த சம்பந்தம் வேண்டா. அந்த அற்பாயுசை மறந்துவிடு! பயனை ஒரு வரனை நாங்களே பார்க்கிறோம்.

---

அல்லல் பிறவிபல ஆனாலும் அன்னாரைப்
புல்லியிருக் கின்றதொரு புண்ணியந்தா செவ்வேளே

அரசை இழந்தவர்கள்; கண் இல்லாதவர்கள்; வனவாசிகள்; அவர்கள் பிள்ளைக்கு ஆயுள் அற்பம் என்பதற்காக, விரும்பிய அவரை எப்படி வெறுப்பது? நிறைவை நிரப்புவதுதானே நியதி. அப்பா! அம்மா!! ஸ்வாமி!!! விதியின் சோதனை விபரீதம் ஆனாலும், மனத்தால் வரித்த அவரை மறக்கும்படி, என்னை வற்புறுத்தாதீர்கள் என்று, சாயபி அழுதாள சாவித்திரி.

அஸ்வபதி நான் முன்னமே சொன்னேன். விதியை மதி வெல்லாது. அமலை திருவுளத்தை நாம் அறியோம், நின் மகள மகா பதிவிரதை. இவளாலேயே அக் குடும்பத்திற்கு, வித்தக மங்களம் விளையலாம். தகுதியுடைய இத திருமணத்தைக் தடுக்காதே! முன்னின்று முடித்து வை!

அம்மா! இங்கே வா என்று, சாவித்ரியை அழைத்தார். சேய்மையில் கொண்டு சென்றார்.

* * *

சாவித்ரி! எம்பெருமாட்டி அமைதி வடிவினள். சங்கு சக்கரம் ஏந்திய அந்தச் சாம்பவி, கனிவுடைய பக்தர்களைக் காக்க, கதையும் கமலமும் தாங்கினள். நிர்க்குணையான தேவி, சகுண சொரூபமும் சார்பவள். மறவாமல் அத்தேவி சொரூபத்தை மனத்தில் நினை!

**ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஐம் மனஸா**
**தேவ்யை ஸ்வாஹா**

எனும் அன்னையின் பன்னிரு எழுத்தின் நாமத்தை, ஐந்து லட்சம் உருவேற்று. சாந்த சக்தியின் அருளால் உனக்குச் சர்வ மங்களம் உண்டாகும்; மறவாதே என்று, அதற்குரிய அநுட்டானங்களையும் அருளினார் நாரதர்.

அருந்தவ முனிவரின் அடி வணங்கிய சாவித்திரி, மங்கை என் வாழ்வை மங்களமாக்கிய ஸ்வாமி! என்றும் தங்கள் அருளை மறவேன்!! மறவேன்!! மறக்கவே மாட்டேன் என்று, ஆனந்தக் கண்ணீரால் அவர் திருவடிகளை அலம்பினாள்.

எழுந்திரு அம்மா! உன் பெற்றோர்கள் காத்திருக்கிறார்கள். நாம் அங்கே போவோம் வா என்று, திருவடியில் விழுந்து கிடந்தாளை எழுப்பினார் நாரதர். அழைத்துச் சென்றார். உன் அநுஷ்டானத்தைப் பிறர் அறியாதபடி நடந்து கொள! பிறர் அறிந்தால், வித்தகமாக வளரும் சக்தி, விரையமாய் விடும் என்று எச்சரித்தார்.

---

மன்னுயிரைத் தன்னுயிரா மாணக்காண் பாரதுபோல்
என்னுயிரில் நீயிருக்கும் இன்பநிலை காட்டாயோ.

இருவரும், அஸ்வபதி தம்பதிகள் இருந்த இடத்தை அணுகினர்.

சரி. சாவித்திரி! வருகிறேன். அஸ்வபதி! மறவாதே! மகள் கருத்தின்படியே மணமுடித்து வை! என்றார்.

மத்திர தேசாதிபதியின் மனம் மருண்டது. வேறு விதியில்லை. எடுப்பான பல்லக்கில், மனைவியையும் மகளையும் ஏற்றினர். பரிவாரம் தொடரப் புறப்பட்டார். காதம் பல கடந்து, சத்யவான் பெற்றோருடன் இருந்த ஆரண்யத்தை அடைந்தார்.

சாளுவ நாட்டு மன்னா தம்பதிகள், கண்ணிழந்த நிலையில் இருந்ததைக் கண்டார். அண்மையில் சத்யவான், பயபக்தியுடன் பணி செய்வதையும் பார்த்தார்.

நெருப்பாறு கடக்க மயிர்ப் பாலம்; அதன்மேல் நடப்பது போல்வது அரச வாழ்வு. இதை அரசர் எண்ணினர். மனம் இடிந்தது.

சதயகீர்த்தி, பல்லக்கில் இருந்து இறங்கிய சாவித்ரியைப் பார்த்தான். பதைத்தது மனம். இவர்கள் இங்கு வந்தது ஏன்? தெரியவில்லையே! என்று பலவும் எண்ணினன்.

அப்பா! மத்திர தேசாதிபதி வந்திருக்கிறார் என்று, அருமைத் தந்தைக்கு அறிவித்தான்.

அப்படியா! அஸ்வபதி அரசரா! ஐயா! வாருங்கள்! வணக்கம்; என்ன செய்தி? எங்கே புறப்பட்டீர்கள்?

தியுமதசேனரே! இதுவா உமது கதி? என்று கட்டித் தழுவினர்; கண்ணீர் சிந்தினர் அஸ்வபதி.

அவர் மனைவியை, மாளவி கைப் பிடித்துக் கதறினள். பிறகு ஒருவாறு, அனைவரும் ஆறி மனம் தேறினர்.

படை எடுப்பம். தியுமத்சேனரே! பகைவரை முறியடிப்பம் என்று படபடத்தார், மத்திர தேச மன்னர்.

அஸ்வபதி! காலம் வரும். அப்போது அறிவிக்கிறேன். இப்போது என் மனம் குழம்பிக் கிடக்கிறது. இந்நிலையில், தாங்கள் தனித்துச் சென்று கூட எதுவும் செய்யக் கூடாது. விதி கெடுத்தது; அதை இப்போது அனுபவிப்பம்; ஆண்டவன் அருளும் காலம் வரும். தெய்வ ரகஸ்யத்தை, முன்கூட்டி நம்மால் அறிய முடிவதில்லை என்று ஆறுதல் செய்தார் தியுமதசேனா.

அப்படியானல் சரி. தியுமதசேனரே! என் அருமை மகளை, சத்யவானுக்கு அளிக்கப் போகிறேன்; இதையேனும் ஏற்க வேண்டும் நீர்!

---

ஆன்ம ஒளியி லருண்மயமா யின்குணங்கள்
மேன்மைபெறத் தங்கவருள் மேன்மையில் வேலோனே.

அஸ்வபதி! கரும்புத் தின்னக் கூலியா! அரசை இழந்தோம். கண்களையும் இழந்து காட்டில் வாழ்கிறோம்! இந்நிலையில், அரச குமாரியை, பாழும் எங்கள் வேதனையில் பங்கு கொள்ளும்படிச் செய்ய, உங்கள் மனம் எப்படித் துணிந்தது?

தியுமத்சேனரே! இன்று உருண்டு ஓடும் செல்வம், வந்தேன் என்று நாளையே வரும் பணத்தைக் கருதவில்லை; இது குணத்தைக் கருதிய மணம்.

அப்படியா! சரி. சத்யவான்! என்ன அப்பா! உனக்கு இது உடன்பாடுதானே!

எந்தையே! பெண்ணைச் சார்ந்தவருள, குலம் கருதுவார் உறவினர். வித்தையைப் பிதா விரும்புவார். ஏராளமான செல்வத்தைத் தாய் எதிர்பார்ப்பள். கண்ணிறைந்த கணவனை எதிர்பார்ப்பள் காரிகை. இது பொது நிலை.

செல்வம் ஒன்று இல்லையேல், எச் சிறப்பு இருந்தாலும், ஏளனமே உலகில் எழும். அதைக் கருதியே மனம் அஞ்சுகிறது!

மறுக்காதே சத்யவான்! என்று அதிர எழுந்தது ஒரு குரல். யாவரும் திடுக்கிட்டனர். திரும்பி நோக்கினர். எதிர் நின்றார் நாரதர்.

உலகம் சர்வ ரட்சகியால் உருவாகிறது. எதிர் அலை எழுப்பும் உரிமை, எவர்க்கும் இல்லை.

சத்யகீர்த்தி! எதனால் உனக்கு யாத்திரை நினைவு எழுந்தது? பாழும் எவர் கண்ணிலும் படாமல், காட்டுச் சிங்கம் நாட்டில் புகுந்தது எவ்விதம்? பாவையர் தாதியர் பலரிருக்க, பாயக் கருதிய சிங்கம், சாவித்திரியையே பார்த்தது ஏன்? அந்நிலையில அங்கு உன்னை அழைத்தவர்கள் யார்? உனது இன்றைய நிலையை உணர்ந்தும், உனக்கே மகளைத் தர, ஊக்கியது எது? எதிர்பாரா நிலையில், என்னை இங்கு அழைத்தவர்கள் யார்? தேவியின் திருவருளை, எவரும் தெரிந்துகொள்ள முடிவதில்லை.

மறுக்காதே! சாவித்திரியை மணந்து வாழ் என்று, ஆசி கூறி அருந்தவர் சென்றார்.

அதன் பின், நல்ல ஒரு ஓரையில் திருமணம் நடந்தது.

சம்பந்திகளை, எங்கள் நாட்டிற்கு எழுந்தருள வேண்டும் என்று, எவ்வளவோ வேண்டினர் அஸ்வபதி.

நல்ல காலம் வரும். அப்பொழுது பார்த்துக் கொள்வோம் என்று மறுத்தார் தியுமத்சேனர். அஸ்வபதிக்குப் பேச வழி

---

அளவில் பெருமை அறிவின்ப மானவுனை
உளவில் கலந்தின்பம் உற்றிருப்ப தெந்நாளோ;

யில்லே. வாய் மூடி மௌனியானுர். விடை பெற்று ஊர்க்குத் திரும்பினுர்.

சாவித்திரி, ஒரு தர்ம பத்தினியின் கடமையைச் செய்தாள். மாமன் மாமியர் மகிழ்ந்தனர். கணவன் உளளம களித்தது. அவள கனிவுடன் செய்கிற சேவைகளால், கானக வாசம் என்ற கவலேயே எவா மனததுள எழவில்லே. இது லௌகிகம்.

அவள் மனம், மனஸா தேவியை இடையருது எண்ணியது. மூச்சு விடுந்தோறும், நாரதர் கறபித்த நன்மனுவை, உவநது மகிழ்ந்து உருவேற்றினள ஒவ்வொரு நாளும் இதே நிலே. இரவில் ஐந்து நாழிகையே துயின்ருள். மற்ற எந்த நேரமும, பரசிவையை, ஊன்றி உணர்ந்தது உளளம்.

நாரதர் குறிதத நாளும் குறுகியது. இன்னும் நான்கு நாள் களே இருந்தன. அஞ்சியது நெஞ்சம். மூன்று நாள் வரை காய் கனி உண்டிலள். குடி நீரும கொண்டிலள்.

அபயம் அபயம்! மெய்யறிவின்ப மேனியனே! தாயே அருள வா வா! அபயம் அபயம்! என்றும் உளள எம்பிராட்டி! அன்னே காக்க வா வா! அபயம் அபயம்! வகையான மந்தர வடிவி! வா அம்பா! வா வா! பராத்பரையே! முதலியளிக்கும் முதல்வி! திரி கரண பாவம் தீர்ப்பவளே! அபயம் அம்மா! அபயம் அபயம் என்று அவள இதயம் அலறியபடியே இருந்தது.

நான்காவது நாள நீராடினள. அருட்டித்தாள். மாமன் மாமியை வணங்கினள்.

யாா சாவிததிரியா?

ஆம் மாமா! *

என்ன அம்மா!

மாமி! உங்கள் குமாரர் கட்டை வெட்டப் புறப்படுகிருர். இன்று நான் உடன சென்று, அவைகளேக் கட்டி எடுதது வருகிறேன்.

அரசகுமாரி நீ; சதி செய்யும் விதி, இப்படி எல்லாம் சீறி நம் மைப் பாாதது சிரிக்கிறது. செய்யம்மா அப்படியே என்ருர் சாளுவர். கண்கள மாமிக்கு கலங்கின.

புனிதை சாவிதரி, கணவருடன் புறப்பட்டாள.

என்ன இது? ஏன் நீ இன்று என்னுடன் வருகிருய்?

பிராணபதி! இன்று பகல் முழுதும் தங்களுடன் , இருக்க, எண்ணுகிறது என் மனம் என்று, நகைமுகம் காட்டினள் நங்கை.

அவனும் சிரித்தான், சென்றனர். குறித்த இடத்தை அடைந்தனர்

---

எத்தா யுதரத் திருந்தாலும் எற்காக்க
அத்தாய்க் கருவில்நீ யானஅருள் என்னேயோ.

டொக் டொக் டொக் என்ற ஒலி யெழ, காட்டில் கட்டை வெட்டினன். போதுமென்றாள் சாவித்ரி.

சரி. சேர்த்துக் கட்டு பார்ப்போம் என்றான். அதற்குத்தானே உடன் வந்தேன் என்று, விறு விறு என்று வெட்டியவைகளைச் சேர்த்தாள். கட்ட ஆரம்பித்தாள்.

சாவித்ரீ!!! என்ற அலறல்.

திடுக்கிட்டது மனம். கட்டியதை விட்டாள். ஓடி வந்தாள. என்ன? என்ன செய்தி? என்று தானும் அலறினள்.

சாவித்ரீ! கால்கள் தள்ளாடுகின்றன. கைகள் சோர்கின்றன. கண்கள் இருளடைகின்றன; ஐயோ! அப்பா! அம்மா என்று சொல்லியபடியே, மெல்லச் சாய்ந்தது அவன் மேனி.

உடனே அவனைப் பிடித்தாள். மடிமேல் கிடத்தினள். நடுங்கியது உடல். நால் திசையும் நோக்கினள்.

எருமை மேல், எதிரில் இருந்தான் இயமன். பாசத்தால் சத்யவான் உயிரைப் பற்றினன். நொடி யளவில் செயல் நிகழ்ந்தது. கட்டையாயது கணவன் உடல்.

ஐயோ என்று அலறினள். ஏறிட்டு நோக்கினள். போகிறான் இயமன்.

எரிந்தது வயிறு. புகைந்தது மனம். பொங்கி எழுந்தது புலம்பல ஒலி. தோகை தருமனைத் தொடர்ந்து ஓடினள்.

ஐய! ஐய! யார் ஐயா நீ?

திடுக்கிட்டு இயமன் திரும்பினன். பதிவிரதையான சாவித்ரியைப் பார்த்தான்.

அம்மா! என் உருவை அறியும் அளவிற்கு உயர்ந்த புண்யவதி நீ! நான் யாரா? நான் தென்திசை அதிபன்.

பாவிகள் உயிரை என் தூதர் பற்றுவர். சத்யவான் புண்ணியவான். அதனால் அவனைப் பற்ற, நானே வர நேர்ந்தது.

ஐயா! நீ தருமா. என் கணவருடன் என்னையும் கொண்டு போம். அதுதான் தருமம். ஆளைப் பிரிப்பது அழகாகுமா?

கோதை இப்படிச் சொல்லிக் கொண்டே'குமுறினள். அவள் அழுத ஒலி, மண்ணும் விண்ணும், என்' மாநிலம் முழுதுமே எதிரொலித்தது.

இறைவியை இடையறாது எண்ணி, அருள் வியாபகத்தில் வியாப்பியமான உணர்வுடைய ஆன்மக் குரல் செய்தி, இப்படித்தான் இருக்கும். இதை அறிந்திருக்கும் இயமனுக்கு, இக்கிலே அதிர்ச்சியைப் பெரிதும் அளித்தது.

---

பெரியோர் உரைத்தநெறி பின்பற்றி நின்கருணைக்(கு)
உரியேன் அருணிழலில் ஒன்றிநிற்ற லென்றேயோ.

அம்மா! உனக்கு இன்னும் ஆயுள் உளது. உன்னை இதற்குள் கொண்டு போக எனக்கு உரிமையில்லை. பயனுள புண்ணியம் மிக்கவர்களைப் பார்த்த பின், அவர்களை வெறுங்கையராக அனுப்புவது பாவம். வேறு ஏதேனும் வேண்டுமேல், கேள்! தருகிறேன்.

என் மாமன் மாமி கண் தெரிய அருளும்!

அப்படியே ஆக என்று அருளி, தன் திசை நோக்கி நடந்தான் தருமன்.

மேலும் தொடர்ந்தாள சாவித்திரி.

என்னைப் பின்பற்றி வருவது சரியல்ல அம்மா!

பிரபு! என் மாமனுர் ஆட்சி, அவர் கைக்கு வர அருளும்!

அப்படியே யாக என்று மேலும் நடந்தான்.

அங்காந்து வாய் திறந்து அழுதபடி, அந்தகனை மேலும் அணுகினள.

என்ன இது? பருவம உடலினர், துன்மை உலகிற்கு வருவது வழிமுறை விரோதம்; சொன்னல் தெரியவில்லையே! நில லம்மா நீ! நில் என்று, அதிர உரைத்தான் அந்தகன்.

ஸ்வாமி! என் பெற்ேருர்க்குப் பிள்ளைகள் பலர் பிறக்க அருளும்!

அப்படியே ஆகும் என்று, நடுவன் மேலும் நடந்தான்.

விடாது தொடர்ந்தாள அந்த வித்தகி.

திரும்பினன் சமன். சாவித்ரீ! இது அராஜகம்!

ஸ்வாமி! எது அராஜகம்? பதியைப் பிரிதது, என்னை ஏங்க வைத்தது அராஜகம்! பதிபிட்சை கேட்கும் என் செயலா அராஜகம்?

பிரம நிஷ்டரே! உமக்கு அடைக்கலம! தக்க கன்ம பயனைத் தருபவரே! உமக்கே அடைக்கலம்! தவத்தால் தர்மத்தை வழிபட்டு பரிதி பெற்ற பாலரே! உமக்கே அடைக்கலம்! சாட்சி மாத்திரமாக, எவ்வுயிரையும் சமமாகப் பார்க்கும் சதுரரே! உமக்கே அடைக்கலம்' நாசம் விளைவிக்கும் சமன் எனப் பெறறவரே! அடைக்கலம். காலத்திற்கேற்ற செயல் விளைவிக்கும் கிருதாந்தகரே உமக்கே அடைக்கலம்! தகுதி யற்றவர்களைத தண்டிக்கும் தண்டதரரே! உமக்கே அடைக்கலம்! வணங்கினுர் புண்ணியராக வாழ்விப்பவரே! உமக்கே அடைக்கலம்! பிரமத்தைத் தியானிக்கும் பெருமானே! அடைக்கலம்! உமக்கே அடைக்கலம் எனும் தூய யமாஷ்டகத்தால் யமனைத் துதித்தாள.

---

உன்னை யுணர்ந்தே உலகப்பற் றெல்லாம்போம்
நன்றுளே நாளதனை நான்காணச் செய்யாயே.

தர்ம மூர்த்தி! தங்களைத் தரிசித்தவர்கள், எண்ணியதை எய்துவர் என்று புனித சுருதி சொல்வது பொய்யாகலாமா? ஆகலாமா? என்று அலறி அழுதாள்.

உறுதது நோக்கினன் சமன். குரூரமான சூலம் ஏந்திய கோலத்தில, சாவித்திரியின் தலைமேல் சாம்பவி, உக்ர கோலத்தில் இருப்பதை உணர்நதான்.

கற்பிற் சிறந்தாள் கதறிய கண்ணீர், தன் வாழ்க்கையை அறுக்கும் வாளாகும் என்றும் அறிந்தான். மனம் அதிர்ந்தது.

பாக்கியவதி! நீ அம்பிகை அருளால் அவதரித்தவள். நிமல தேவியின் அருள், உன்மேல் நிழலிடுகின்றது. பல மைநதரைத் தந்து, உன் கணவருடன் ஊழிக் காலம் வாழி நீ! மாதேவியை உன்போல் வழிபடும் மாதர்க்கு, வாய்த்த கணவர் ஆயுள் வளரும். ககன வடிவியின் திருக்கரத்தில், கால தத்துவம் உளதுகாண் என்றபடி, காலதேவர் உருவம் கரந்தது.

மகிழ்ந்த மனத்துடன், சாவித்திரி திரும்பினள். தலைவனை எடுத்தாள்; பழையபடி தன் மடிமேல் இட்டாள் உறங்கி விழிதத வன்போல், சத்தியவான் எழுந்தான்.

மருண்ட சத்தியகீர்த்தி, மங்கையை நோக்கினன்.

சாவித்ரி! ஒரு சௌந்தர்ய புருஷர், என்னை அழைத்துச் சென்றார். அவரிடம் மன்றாடி, மேலான ஒருத்தி என்னை மீட்டாள். இப்படி ஒரு கனவு கண்டேன்; என்ன அதிசயம்?

கனவல்ல அது என்று, நடந்தவை முழுதும் நங்கை கூறினள்.

சாவித்ரி! அம்மா! சாவித்ரி! என்று இரு குரல்கள், குதூகலம் மிகுந்து கூவி யழைத்தன.

குரல் வந்த திசை நோக்கி, இருவரும் ஓடினர்.

மாமா! மாமீ! என்று, வந்து சாவித்ரி வணங்கினள்.

சத்யகீர்த்தி! என்ன அதிசயம்! எங்கள் கண்கள்..............

ஆம் அப்பா! எல்லாம் சாவித்திரி செய்த பூசையின் பயன் என்று, ஓன்று விடாமல் சத்தியகீர்த்தி உரைத்தான்.

மாமன் மாமியார், மருகியைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

சாளுவ நாட்டைக் கவர்ந்த பகைவன், திடீரென்று இறந்தான். பழைய மந்திரிகள, பட்டவர்த்தன யானையுடன் பரிவாரங்கள் தொடர வந்தனர். உள்ளதை உரைத்தனர். உவகை விளைந்தது.

இனி சத்யகீர்த்தியும் சாவித்திரியுமே இங்நாட்டு அரச அரசியர் என்றார்கள் பெற்றோர். எல்லா அரசர்கட்கும் ஓலை போக்

சேர்ந்த சிறுமையெலாம் தீரத் திருவாளர்
நேர்ந்து கரம்பற்றி நிற்புணர்த்தல் என்றேயோ.

கினர். மத்திரதேச மன்னர் விவரம் உணர்ந்தார். பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் பெருமை தந்தாள் எங்கள் மகள என்று பாராட்டினர். நலம் சிறந்த மகுடாபிஷேகம் நடந்தது.

சாவித்திரி வழிபாட்டின் பயனாய்ச் சத்தியவான் உயிர் பிழைத்தான் என்பதை அறிந்த உலகம்,

சாரமான தேவி! மூத்தியளிக்கும் முதல்வி! நாக இருளைத் தாண்டச் செய்யும் நங்கள் பெருமாட்டி! அவதி பலவும் அழிப்பவளே! தொன்மை வினைகளைத் தொலைப்பவளே! அன்பும் இன்பும் அளிப்பவளே! வாழி தேவி வாழி நீ என்று, வரத தேவியை வாழ்த்தி மகிழ்ந்தது வையகம்!

வாழ்க தேவி தாஸர்கள் !

---

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, **B. A., B. T.**

## வள்ளிமலை (குன்றுதோறாடல்)

மலைகள் பலவேறு வகைகளில் பெயர்பெறும். உருவத்தால் பெயர் பெற்றவை நாககிரி, பூசுமலை போன்றவை.

பூசித்தோரால் பெயர் பெற்றவை கழுகுமலை, கழுக்குன்றம் அகத்தியமலை. அவற்றின் தனிச் சிறப்பால், ஒளியால், பிரகாரணங்களால் பெயர் பெறுதலும் உண்டு. வெள்ளியங்கிரி, பொன் (மேரு) கிரி, ரத்னகிரி, மருதமலை, சென்னிமலை முதலியன. இறைவன் பெயராலும் இறைவி பெயராலும் அடியார் பெயராலும் அழைக்கப்படும் மலைகளும் உண்டு. அண்ணாமலை, சுவாமிமலை, சிவகிரி சத்திகிரி, சித்ரகிரி, இடும்பன்மலை, வள்ளிமலை போல்வன. இங்கு வள்ளிமலை, வள்ளல் தொழு ஞானக் கழலோனாகிய மயிலோனுக்கு வாய்த்த மனையாகிய வள்ளியம்மையின் பெயராலேயே பெயர் பெற்றமை பெருஞ்சிறப்பாகும்.

---

ஆர்ந்த உறவால் அனைந்தின்பம் காணஎனை
ஓர்ந்துவா வேலேந்தி ஓகைமயி லூர்வானே.

மலை இருக்கை: இது சித்தூர் ஜில்லாவிலுள்ளது. வேல் நம்பி என்ற வேடடுவநம்பி ஆட்சிக்குட்பட்டதெனக் கூறப்படும் சிற்றூர் என்பதும் இதுவேபோலும். வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர் சிலமேத்திய சித்தப்ரசித்தரே' என்றபடி சித்தரின் சித்துக்கள்ஊர், சித்தூர் ஆகியதோ? மலைநாட்டுச் சிறுஊர், சிற்றூர் எனவழங்கியது என்னலு மொன்று. இது திருவல்லம் (வடஆற்காடு ஜில்லா) புகை வண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒன்பது மைல் தொலை விலுள்ளது. மலையைச் சார்ந்து வியன்புலத்தரும் விளங்கும்படி மேற்பாடி என்ற கிராமமும் உண்டு. இங்கும் நல்ல ஓடையருகில் சோலையிடையில் ஒரு சிவாலயம் உள்ளது. வள்ளியம்மையாரின் தவச் சாலையமைந்த வள்ளிமலை அருகிலிருப்பதால் அந்த மேன்மை யணைத்தும் படிதலின் மேற்பாடி யாயிற்று.

## வள்ளிமலை வளம்

மேற்படியை அடுத்து விளங்குவது வள்ளிமலை. இது மலைவாழ்குறவர், அகழ்ந்தெடுக்கும் வள்ளிக் (கிழங்கு கிடைக்கும்) கொடி படர்ந்த சிறப்பினது.

> வள்ளிக்குழாம் அடர்ந்த வனளிக்கல் மீது சென்று
> வள்ளிக்குவேடை கொண்ட—பெருமானே
>
> (வள்ளிக்குழாம்—வள்ளிக்கொடிகளின் கூட்டம்.
> வேடை—மோகம்)
>
> வள்ளிபடர் சாரல் வளளிமலை மேவு
> வள்ளி மணவாளப்—பெருமானே

## வள்ளியை மணந்த வகை

திருமால் சிவமுனியாகி திருமகளான மானை நோக்கினர் கூடி வள்ளியைத்தந்தனர். அவர் வேல்நம்பி என்ற வேடமன்னன் மகளாய் வளர்ந்து தினைவனங் கிளி காத்தாள். மேவிய புனததிதனின் ஓவிய மெனத் திகழ்ந்த மேதகு குறத்தியுள்ள இடத்தைச் சில முலாவிய நாரதர் வந்து காட்டினர். கன்று காமநோய் கவலையுள் வைத்தான் கந்தன். ஆசை மொழிப்பல பேசி நின்றான்.

---

பெருந்தகுதி நின்னைப் பேணுவதால் எய்தும்
வருந்தலிலாப் பேரின்பம் வந்துறுதல் ஓர்ந்தேனே.

வேடர்கள் வரவே வேங்கை (மரம்) ஆனான். மானை (கன்னியைப்) பிடிக்க வேங்கையால் தானே முடியும்! புதிதாய்த்தோன்றிய மரத்தை முறிக்காது பூவைக்குத் துணையாய் விடுத்துச் சென்றான் வேல்நம்பி. வேங்கையுருமாறி வேடனாய் வேலன் நின்றான். வள்ளியின் அழகுரு அத்தனையும் மடலிடை எழுதி மனக்களிப்புற்றான்; வேட்டுவ நம்பி வரும்போது நற்றவ விருத்த வேடமது கொண்டான். பூதியளித்து மன்னன் உதவியால் மங்கையுடன் தேனுந்தினையும் தின்றான். நீர் வேண்டி ஏழுமலை கடந்து சுனையுற்று நீருண்டு தாக நீங்கினான். மோகமும் நீக்க வேண்டுமென மொழிந்தான். அவ்விட மகன்ற அம்மையை அஞ்சக்கர ஆனையால் ஆட்கொண்டான். பின்னொரு நாள் தோழி மூலம் வள்ள்யைக்கொண்டு செழுஞ்சோலை சேர்ந்தான். தேடிவந்து போரிட்ட வேடரைச் சேவல் கொடியால் மூர்ச்சிக்கச் செய்தான். பின்னரெழுப்பி வேடரது சீறூர் அடைந்து அங்கி சான்றாக மணங்கொண்டான். இவ்வரலாற்றை அருணை அண்ணல் தம் திருவாக்குகளால் அழகுறச் சாற்றுவதைப் படித்து மகிழுங்கள்.—

"மாமுனிவன் புணர்மான் உதவும் தனி
மானை மணஞ்செய்த—பெருமாளே
"தினைவனக்கிளி காத்த சவுந்தரி
அருகு சென்றடி போற்றி மணஞ்செய்து
செகமறிந்திட வாழ்க்கை புரிந்திடு—மிளையோனே.
"சில மூலாகிய நாபதர் வந்துற்று
ஈதவள வாழு புனமாம் எனமுந்தத்
தேமொழிபாளித கோமள இன்பக்—கிரிதோய்வாய்
"குறமறவா கொடியடிகள் கூசாதுபோய் வருட
.......... ..............குளிர் கணியின் இளமரம
தேயாகி நீடி யுயர்—குன்றுலாவி"
(கணி—வேங்கைமரம்)
குறமகள் செம்பொனூபுர கமலமும், வளையணி—புதுவேயும்
இந்துவாண்முக வனசமு ம்,ருகமத
குங்குமாசலயுகளமும், மதுரித
இந்தளாம்ருத வசனமு, முறுவலு—மபிராம

---

பூங்கொடிகள் கொம்பொன்றைப் புல்லுவது போல்முருக!
ஓங்க நினைத்தழுவி உள்மகிழச் செய்யாயே.

இந்த்ரகோபமு, மரகத வடிவமும்,
இந்த்ர சாபமும், இருகுழையொடு, பொரு
இந்த்ர நீலமும், மடலிடை எழுதிய—பெருமாளே

(குறமகள் செம்பொற் சிலம்பணிந்த மலரடிகளையும் வளையல்கள் அணிந்த புதிய மூங்கில் போன்ற தோள்களையும், மதியோசம் ஒளிவீசும் மலர் வதனத்தையும், கத்தூரி குங்கும மணிந்த மலைபோன்ற இருபுயங்களையும், இனிய இந்தளப்பண்போலும் அமிருத மொழிகளையும் பற்களையும் அழகு மிக்க தம்பலப்பூச்சு போலும் செவ்வாயையும், பசியாநிறமும் வானவில் போன்ற புருவத்தைம் இருகாதணிகளைத் தாக்கும் நீலமலர் போலும் விழிகளையும், மடலில் எழுதிய—பெருமாளே)

வேளைதனக்கு—உச்சிதமாக
வேழ மழைத்த—பெருமாளே"

"வேலையன்பு கூரவந்த ஏகதந்தயானை கண்டு
வேடர் மங்கை ஓடி அஞ்ச—அணைவோனே

"மெய்ய மொழிவீடு தையலை மூங்காலு
செய்ய புயமீதுற்று—அணைவோனே.

"ஓத குறவான் வனத்தில் மேவி அவள்கால் பிடித்தவள்
ஓம்எனும் உபதேச வித்தோடு—அணைவோனே.

"காமன்கணை மலர்கள் நாணவேடம் பெண் அமளிசேவை
காவணைக்கள் பழநி மேவு—பெருமாளே

## பிற குறிப்புகள்

இந்த வள்ளிமலையில் அன்று முருகவேளுக்காக முன் வந்த யானைமுகன் யானை உருவுடன் நின்ற கணேசகிரி என்பதும், "வள்ளிமலையிலுள்ள குமரியாட வந்தேன்" என்று குகவேள் கூறிய குமரிச்சுனையும் உள்ளன. நம்பிராஜன் கோட்டையும் சற்று தூரத்தில் காட்சியளிக்கிறது.

## அறுமுகன் ஆடல்

இத்தலத்தில முருகவேள் காமவலைப்பட்டான் போல் நடித்தாலும் இது மூலப்பிரணவ சாமியாகவும், காமனை

---

பூவால்நார் வாசனையைப் போர்ப்பது போல,அருள்
கோவாம் நினைப்புணர்ந்து தெய்வமணம் கொள்வேறே.

எரித்த கண்ணில் தோன்றிய கந்தனுகவும் விளங்கும் அண்ணலுக்கு எவ்வித இழுக்கினையும் தருவதாகாது. காரணம் என்னவெனில், வானில் விளங்குகிறது மதி. அதன் பிம்பம் காணப்படுகிறது, மண்ணில் உள்ள நீர் நிறைந்த குட்டையில். காற்று வீசுங்கால் குட்டையிலுள்ள நீரும், அதில் காணும் மதியின் பிம்பமும் அலையும். ஆனால் இவ்வித சலனம் விண்ணில் விளங்கும் மதிக்கு இல்லை அல்லவா?

"உலைப்படு மெழுகதன்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல மறுகியே வருந்தா நின்றான்
கலைப்படு மதியப்புத்தேள கலங்கலம்புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆட லெல்லாம்"

அதனைப் போன்றதே ஆறுமுகன் வள்ளியை மணந்த வரலாறு என்க.

## வள்ளித் திருமண தத்துவம்.

வசந்த காலம் மாலைநேரம் அரண்மனைப் பூஞ்சோலை. தாதி ஒருத்தி கையால் சிறுவண்டி ஒன்றைத் தள்ளிச் செல்கிருள். வண்டியில் தங்கப்பதுமைபோன்ற குழந்தை இருக்கிறது. அதன் இயற்கை அழகைப்பல வேறு அணி வகைகள் மிக்குப்பொலியச் செய்கின்றன. குறுமுறுவல் செய்யும் போதெல்லாம் குழந்தையின் தசைமிக்க கன்னங்களில் குழிவிழுகிறது. இந்த அழகை அநுபவித்த வண்ணம் தோழி வண்டியைத் தள்ளிக்கொண்டு போகிருள்.

அதோ! அரண்மனைத் தோட்டத்தின் மூலையிலிருந்து ஒரு முகமூடி யணிந்த கருத்த உருவம்! சரேலெனப் பாய்கிறது. தோழியின் மூக்கில் ஏதோ காட்டப்பட்டது. தாதி மயங்கிக் கீழே வீழ்ந்தாள். அடுத்த கணத்தில் ஐந்தாறு உருவங்கள் அவளையும் குழந்தையையும் தூக்கிக்கொண்டு மின்னலென மறைந்தன. சூரியன் மறைந்தான். இருள் கவிந்தது. உலாவப்போன தாதி எங்கே? குழந்தை கதி என்ன? எங்கும் பரபரப்பு! எங்கும் ஆட்கள்

---

நாவாரப் பாடும் நலஞ்சிறந்தார் கூட்டத்தில்
தாவாரம் கொண்டு தனியின்பம் காண்பேனே.

தேடினர். காவும் கரையும், குளமும் குட்டையும் நகரின் மூலையும் முடுக்கும் எங்கும் தேடியாய்விட்டது இல்லை! இல்லை! ஒருவகைத் துப்பும் துலங்கவில்லை. அரசன் அலறிச் சாய்ந்தான். சேயைப் பெற்ற தாயும் மூர்ச்சித்துத் தரையில் விழுந்தாள். எங்கும் அழுகுரல்! எங்கும் ஏக்கம்.

ஆண்டுகள் பல உருண்டோடின. கடந்த யோகரும் கடப்பரோ, மக்கள் மேல் காதல்! அரசன் உள்ளத்தை மெள்ளத் தேற்ற வேண்டும் என்றே அவனது குலகுரு அவனுடனே அல்லும்பகலும் இருந்து அறிவுரை கூறி வந்தனர். அரசனும் ஒருவாறு தேறியிருந்தனன்.

அன்றிரவு சுமார் 10 மணி. நிலவின் பூரண ஒளி எங்கும் பரவியிருந்தது. அரண்மனையின் நிலா மணி முற்றத்தில் அரசனும் குருவும் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தனர். எதிரில் ஒரு முகமூடி வீரன் உருவிய கத்தியுடன் நிற்கிறான் அவனது கட்டமைந்த உடலும் இடியிடித்தார் போன்ற குரலும் அச்சம் விளைவித்தன. வந்தவன் கம்பீரமாக அதிகார தோரணையில் அரசனை நோக்கி 'அரசே! கஜானுவின சாவியைக்! கொடுக்கிறாயா? அன்றி உயிரைக் கொடுக்கிறாயா? என்று கேட்டான். அருகில் அமர்ந்திருந்த ஆசிரியர் வந்த முகமூடியை உற்று நோக்கினார். காதில் களாக்காய்க் கடுக்கன். அரைச் சல்லடம், மூடிகளிடையேயும் ஒளிவிடும் கண்கள்' ஆஜானுபாஹு (முழங்காலின் கீழேயும் தொங்கும் நீளமான கைகள்) வான அரச இலக்கணம் எல்லாம் கண்டதும் பரிவு ஒருபுறம், பரிதாபம் ஒருபுறம் பற்றியீர்க்க நின்றார். பிறகு வீரனை நோக்கி 'நண்ப! நீ விரும்பியபடியே சாவிகளைக் கொண்டு வரும்படி அரசரை உள்ளே அனுப்பு. உனக்கு எவ்வித கெடுதியும் தடையும் இல்லாமல் சாவியனைத்தும் தருவார் என்றார். வீரன் கடக்கென்று சிரித்து ''வாலைவிட்டு விட்டுத் தும்பைப் பிடிப்பதா? அரசரை உள்ளே அனுப்பினால் சாவியா வரும்? என்னைக்கொல்ல கத்திகள் அல்லவா வரும்!' ஆயினும் நான் இதற்கொன்றும் அஞ்சேன்.

---

நின்றிடமும் சென்றிடமும் நினைக்கும் மனத்திடமும்
துன்றவருள் கைகொடுக்கும் தூயோய்க் கடைக்கலமே.

கள்வர் கூட்டத் தலைவன் மகனைக் காவலர் சேனையால் எளிதில் கைது செய்யமுடியுமா? பார்க்கிறேன். சரி போங்கள். சாவி விரைவில் வரட்டும்'' என்றான்.

அரசனும் ஆசிரியரும் ஏதோ தமக்குள் கண்ணாலேயே பேசிக்கொண்டனர். பிறகு ஆசிரியர் வீரனை அழைத்து அருகில் இருத்தி அவனைப்பார்த்துப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். உடனே வீரன் உள்ளமும் உருகியது. அவன் ஆசிரியரைப்பார்த்து 'ஐயா! இது என்ன சூழ்ச்சி? என்னைக் கண்டு ஏன் வருத்தம்?' என்றான். ஆசிரியர் மகனே உன்னைக் கூர்ந்து பார்த்தபின் ஒரு உண்மை தெரிந்தது. உரைக்கட்டுமா!' என்றார். வீரனும் சற்று சலிப்புடன் 'அதையுந்தான் கேட்கிறேன் கூறுங்கள்' என்றான். உடனே ஆசிரியர் 'மகனே! உனது முகம், கை, உடல், உள்ளம், உரை இவற்றிலிருந்து நீ அரசாளப் பிறந்த அருமை மகன் என்று தெரிகிறது. இப்போது நீ கொண்ட கோலமும் சீலமும் உனக்கு எப்படி வந்தன என்று தெரியவில்லை. நல்ல தாய் தந்தையர்கள், அரசி அரச குடும்பத்தில் பிறந்த நீ இப்படி ஆனது ஏனோ! செங் கோலேந்தும் சிறிய கைகள், கன்னக்கோலேந்தும் கள் வரைப் போலக் கத்திபிடிக்கின்றன. குண்டல மணியும் காதுகள் காட்டுக் களாக்காய்கள் கொண்டு அசைகின்றன. பகைவரை அழிக்கவேண்டிய வீரம் பண்பாளரை அழிக் கப் பயன்படுவதுதான் பரிதாபச் சித்திரம்! என்று சொல் லிச் சொல்லிக் கண்ணீருகுத்தார். வீரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன! நான் ஒரு காவலன் மகனா? கள்வன் மகனல்லவா! வேந்தன் புதல்வனா? வேட்டுவ மைந் தனல்லவா! என்ன விந்தை! இது உண்மையாயிருக்குமா? ஐயா! நீர் சொல்வதுபோல் நான் ஒரு அரசிளங் கோ வானால், என் பெற்றோர்கள் எங்கே? அவர்களைக் காண லாமா? அவர்கள் என்னை ஏற்பார்களா? என்று பரபரப் புடன் பகர்ந்தான். ஆசிரியர் என் அன்பே! நீ எவ்வாறு உன் பெற்றோரைக் காண ஆர்வங் காட்டுகின்றனையோ, அதேபோல் அவர்களும் உன்னைக்காண அவாவுடனிருக் கின்றனர், ஆனால் அவர்கள் உன்னைக் கள்வர் கோலத்

---

செல்வம் திருவருளாப் பேரின்பச் செல்வியொடு
புல்லி யிருக்கவருள் புள்ளிமயில் வேலோனே.

துடன் காண விரும்பமாட்டார்கள்; காவலன் கோலத்துடன் காண விழைபவர் 'என்றார். 'அது எனக்குக் கிட்டுமா? என்றான் வீரன். ஏன் கிட்டாது! உனக்கு விருப்பமானால் இப்பொழுதே கிட்டும்! 'என்றார் குரு. 'சரி' என்றான் வீரன். குரு சைகை செய்தார். இருவீரர்கள் வந்து முகமூடியை அரண்மனைக்குள் அழைத்துப்போயினர். கொஞ்சநேரத்தில் கள்வன் இளவரசனுடையுடன் வெளி வந்தான். பிறகு ஆசிரியர். அவனை அழைத்துப்போய் ஒரு திரை எதிரில் நிறுத்தி, 'இதனுள் தான் உன்பெற்றோர் உள்ளனர் 'என்றார். 'ஆமாம் அவர்கள் எப்படி இருப்பார்கள்' என்று கேட்டான். உடனே குரு, அவனது மார்பில் கட்டி இருந்த தங்க ரக்ஷையைப் பிடுங்கித் திறந்தார். அதில் அவனது பெற்றோர் உருவப்படங்கள் இருந்தன. அவற்றைக் கண்ட மகன் திரையருகில் நின்று, 'அம்மே! அப்பா இதோ உங்கள் மகன் வந்திருக்கிறேன்! 'என்றான். 'கண்ணே! மணியே!' வருக! வருக! 'என்ற குரல் கேட்டது. திரை விலகியது. அரச தம்பதிகள் நெடுநாளைக்குப் பிறகு இழந்த மகனை எதிருறக் கண்டு கட்டியணைத்துக் கண்ணீ ராட்டினர். மகனும் தன் அறியாமைக்கு வருந்தி அவர்களோடு ஒன்றானான். பிரிந்தவர் கூடிடில் பேச வேண்டுமா? இதுவே வள்ளியம்மையார் திருமணத் தத்துவமாகும்.

இக் கதையில் கூறப்பட்ட அரசிளங் குமரன் அரச உரிமையை மறந்து வேடர்களால் வளர்க்கப்பட்டதால் தன்னை வேடனென்றே எண்ணினான், ஆனால் ஆசிரியர் உணர்த்தியபின் தான் அரச குடும்பத்திற் குரியவனாய்ப் பெற்றோரை அடைந்தான். வள்ளியம்மை முருகன் குடும்பத்திற்குரிய ஆன்மா. அதனை மறந்து வேட்டுவர் குலமகளாய் வளர்ந்த விதத்தை, முருகவேள் வேடனாய், விருத்தனாய் வந்து உணர்த்தியதும், உண்மை உணர்ந்து குமரனுக் கிசைந்த கொடியாய்விட்டாள். ஆன்மாவும் ஐம்புல வேடர்பால் அகப்பட்டு ஆண்டவன் நிலையை மறந்து வாழும்போது இறையவனே குருவாய் வந்து உண்மை உணர்த்திய உடன் தனது பண்டைய தொடர்பு உணர்ந்து ஆண்ட

எந்தளவு கற்றாலும் எந்தாய் அவருணர்ணவின்
வந்து கலந்திலையேல் வறட்டறிவ ராவாரே.

வனே அணேகிறது. இவ்வுண்மையைச் சிவஞான போதம் 8-ம் சூத்திரம் நன்கு விளக்குகிறது.

" ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அந்நியம் இன்மையின் அரனகழல் செலுமே"

ஆதலின் ஆன்மாவைத் தீக்கை வகையால் தூய்மைப் படுத்தி உண்மை உபதேசத்தால் இறையடிக் கீழ்செலுத்தும் திறமே வள்ளியம்மையார் திருமணமாகும். இவ்வித அற்புதத்தை ஆடலாகக் காட்ட அமைந்த தலம் வள்ளிமலேயே.

(தொடரும்)

---

# பாவமே புண்ணியம்

## (திருமுருக கிருபானந்தவாரி)

பலப்பல அரிய பெரிய இனிய கருத்துக்களே நமக்கு உணர்த்துகின்ற ஞானக்கருவூலம் திருவாசகம். அநுபவ ஞானியாகிய மாணிக்கவாசக சுவாமிகள் நமக்கு அதனே அளப்பற்ற கருணையினுல் வழங்கியருளினர்.

புண்ணியம்—பாவம் என்பவை செய்கின்ற செயல்களி லிருந்தே இது புண்ணியம்: இது பாவம் என்று கூற வேண் டும். சிறிது நுணுக்கமாகச் சிந்தித்துத் தீர்மானிக்க வேண்டும்.

ஒரு கொலேஞன் பசுவைக் கொல்லும்பொருட்டுக் கத்தி யைத் தீட்டுகின்ருன். பூலோக காமதேனு பசு கட் டுத்தறியை அறுத்துக்கொண்டு ஓடிவந்து கோயில் மடைப் பள்ளியில் புகுந்து கொண்டது. கோயிலில் ஒரு பக்தர் இறைவழிபாடு புரிந்து கொண்டிருக்கின்ருர். அக்கொலே ஞன் வந்து, "ஐயா! இந்த வழியே பசு வந்ததே; எங்கே

---

நெஞ்சதனில் வஞ்சமிலார் நியமவுரை செய்தென்னேக்
கொஞ்சும் திருவருளிற் கூட்டுவரோ மெய்க்கோவே.

போயிற்று?" என்று கேட்கின்றான். இப்போது அந்தப் பக்தன் மெய் சொன்னால், பசுவை அப்பாதகன் கொன்றுபோடுவான். பொய் சொன்னால் பசு உய்வு பெறும். மெய் கூறுவது புண்ணியம்; பொய் கூறுவது பாவம். இந்த இடத்தில் புண்ணியம் பாவமாகி விடுகின்றது. பாவம் புண்ணியமாகின்றது.

"ஐயா! பசு இதோ இப்படி ஓடியது" என்று ஒரு பொய் சொன்னார். கொலைஞன் சென்றுவிட்டான். அதனால் பசுவின் உயிர் பிழைத்தது. "சத்தியம் வத" என்று வேதங் கூறுகின்றது.

> யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற.

என்று தமிழ்மறை கூறுகின்றது. "சத்தியமே நித்தியம்" மற்றவை எல்லாம் அநித்தியம். ஆனால் இங்கே சத்தியம் பேசினால் பசுவதைபடும்.

மற்றொன்று. ஒரு முரட்டுக் குடிகாரக் கணவன் மனைவியை அடிக்கத் தடியை ஓங்கிக்கொண்டு வருகின்றான். அப்பெண்மணி நடுங்கி ஒரு வீட்டில் நுழைந்து பதுங்கி ஒளிந்து கொண்டாள். அக்கணவன் அவளைத் தேடி வந்து எங்கே என்று வினவுகின்றான். அங்குள்ளார் அவள் ஒளிந்த இடத்தைக் கூறினால் அபலையாகிய அப்பெண்மணியின் எலும்பு முறிந்துவிடும். இந்த இடத்தில் பொய் சொல்லி அப்பெண்மணியைத் தப்புவிக்கவேணும். ஆகவே இந்த இடத்திலும் பொய்யால் புண்ணியமும், மெய்யால் பாவமும் விளைகின்றன.

ஒரு பெரிய நகரத்திலே வந்து நாடகம் பார்த்துவிட்

---

எவ்வழியும் செவ்வழியே எவ்வுரையும் தெய்வமொழி
அவ்வியலில் என்னை அணைத்திருத்த வாராயே.

டுப் பலர் அருகிலுள்ள சிற்றூருக்குப் போய்க்கொண்டிருக்கின்றார்கள். ஒரு இளந்தம்பதிகள் சற்றுப் பின் தங்கி மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டு போகின்றார்கள். ஒரு பாவி அப்பெண்மணியின்மீதுள்ள அணிகலன்கள்மீது ஆசை கொண்டு கணவன் மண்டையைத் தடிகொண்டு தாக்கி அடித்துக் கொன்றுவிட்டு அப்பெண்மணியின் வாயில் துணியை அடைத்து அணிகலன்களைக் கவர்ந்துகொண்டு ஓடினான். எதிரில் ஒரு போலீஸ் அதிகாரி தற்செயலாக வந்தார். அவர் அவனை நோக்கி எங்கே? ஏன்? அவசரமாக ஓடுகின்றாய்? என்று கேட்டார். அவன், "இவை எனது சொந்த நகைகள்" என்றான். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கின்றது. அதிகாரி அவனைப் பிடித்து அடித்து உண்மையை உணர்ந்தார். செய்தித் தாள்களில் கொலைபாதகன் என்று அவனைப்பற்றி செய்தி வந்தது, அரசாங்கம் அவனைத் தண்டித்தது. மகாபாவி என்று நிந்தனைக்கு ஆளானான்.

இதே மாதிரி மற்றொரு நாள் நாடகம் பார்த்துப் போகின்ற ஒரு இளந் தம்பதிகளைக் கொன்று நகைகளைப் பறித்துக்கொள்ள ஏழு முரடர்கள் முயன்றார்கள். அவ்வழியே வந்த ஒருவர் நரசிங்கம்போல் பாய்ந்து கறங்கெனச் சுழன்று காலிகள் ஏழு பேரையுங் கொன்று அந்த இளந் தம்பதிகளைக் காத்தருளினார். அரசாங்கம் இதனை அறிந்து அவரை அழைத்துப் பாராட்டிப் பரிசளித்தது. உலகம் அவரைப் "பரமஉபகாரி", "தீர சிகாமணி", "தன்னலமில்லாத தயா சாகரம்" என்று புகழ்ந்தது.

---

புனிதத் திருப்புகழே ஓதும் புகழுடையோர்
மனிதரலர் தெய்வமெனும் மன்மதிதந் தாளாயே.

இப்போது சிந்தியுங்கள். ஒரு கொலை செய்தவனை உலகம் நிந்தித்தது; ஏழு கொலை செய்தவனை உலகம் வந்தித்தது. காரணம் யாது? முன்னே கொலை செய்தவன் தீய நினைவுடன் செய்தான்; பின்னே கொலை செய்தவன் தூய நினைவுடன் செய்தான். அது தனக்கென்று செய்யப்பட்ட கொலை; இது பிறர்க்கென்று கருணையுடன் செய்த கொலை. முன்னையது பாவம்; பின்னையது புண்ணியம்.

ஆகவே பாவம், புண்ணியம் என்பது வெறும் செயலால் மட்டும் அமைவதில்லை' என்ன கருத்தினால் எதன் பொருட்டுச் செய்யப்பட்டது என்று பார்த்து முடிவு செய்யவேண்டும்,

இந்த அரிய கருத்தை நமக்கு மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் கூறுகின்றார்.

திருச்சேய்ஞ்ஞலூரில் அந்தணர் குலத்தில் எச்சதத்தன் என்பானுக்கு திருமைந்தராக அவதரித்தவர் சண்டேசுர நாயனார். அவர் இளமையில் மண்ணியாற்றங்கரையில் ஆத்திமரத்தின்கீழ் மணலால் சிவலிங்கத்தை நிறுவிப் பசுவின் பாலால் ஆட்டி சிவபூஜை செய்து கொண்டிருந்தார். அவருடைய தந்தையாகிய எச்சதத்தன் வந்து அச்சிவ பூஜையைத் தடுத்து அபிஷேகத்துக்குரிய பால் குடங்களைக் காலால் உருட்டினான். சண்டேசுர நாயனார் அது கண்டு பொறாது அங்கிருந்த ஒரு கொம்பை எடுத்தார்; அது மழுவாகியது. அதனால் பிதாவின் கால்களை வெட்டித் துணித்தார். எச்சதத்தன் இறந்தான்.

---

எல்லார்க்கும் யாண்டும் இதமே செயஅருடி
கல்லார்க்கும் கற்றார்க்கும் கண்ணுறும் கற்பகமே.

எச்சதத்தன் சண்டேசுர நாயனருடைய தந்தை; குலத்தில் வேதியன்; வேதியனைக் கொன்றல் பிரமகத்தி; தந்தையும் வேதியனுமாகிய அவனைக் கொன்ற பாதகம் சிவபுண்ணியமாகத் மாறியது. அவருக்கு இறைவன் காட்சி தந்து, சண்டேசுரரைத் தனது புதல்வராக ஏற்று கொன்றை மாலையும் தமது நிவேதன அமுதுந் தந்து சண்டேச பதத்தையும் வழங்கினர்.

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம்.

—திருவாசகம்.

தீதில்லை—பிதாவைக் கொன்றது இங்கே குற்றமாகாது.

மாணி—பிரமசாரி—சண்டேசர். சிவமயமாய் நின்ற சண்டேசர் தந்தையும், அந்தணனும் ஆகிய எச்சதத்தனைக் கால்களை வெட்டி வீழ்த்திய பாதகமே நன்மையாகி விட்டது.

சோறு பற்றியவா—நன்மையாகியது என்ன ஆச்சரியம்.

தேவர்கள் அவரைத் தொழுகின்ற பதவியைத் திருவருளால் பெற்றனர்.

---

569



## சென்னையில் 26—1—58-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை

### ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளது

# திருவுருவம் பிரதிஷ்டை விழா

---

குடியரசு நன்னாளில் சென்னையில் எங்கும் குதூகலமாக யிருந்தது. அருட் துறையிலும் அமோகமான உற்சாகத்துடன் அடியார்கள் காலையில் ஸ்ரீ சென்ன மல்லீசுரர், ஸ்ரீ சென்ன கேசவப் பெருமாள் தேவஸ்தானத்தில் குழுமி, பிரதிஷ்டையில் கலந்து கொண்டனர்.



பூக்கடைக் கோயிலென சுலபமாக யாவருக்கும் தெரிந்த இவ்வாலயத்திலுள்ள அநுபூதி மண்டபத்தில் ஒன்பது ஆண்டுகளாக ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் அடியார் திருக்கூட்டம் நடந்து வருகிறது. திரு. திருப்புகழ் மணி அவர்கள், கி. வா. ஜகந்நாதய்யர் அவர்கள் தலைமை தாங்கி திருப்புகழ் உபந்நியாசம் நடந்து வருகிறது. ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களால் ஆசிர்வதித்தருளிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளுடைய திருவுருவத்தை திரு. திருப்புகழ் மணி அவர்கள் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

பகல் பல திருப்புகழ் சபைகள் திருப்புகழ் பஜனை செய்த பிறகு ஸ்ரீ அருணகிரிநாதருடைய பாடல்களைப் பற்றி அறிவிலும், அருட் துறையிலும் உயர்ந்தோர் விளக்கம் செய்தார்கள். ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் இரவில் திருவீதி பஜனையைத் துவக்கிக் கொடுத்தார்கள். அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தினர்களின் நீண்டகால விருப்பம் கைகூடியது, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளது பெருங்கருணைதான். மிகக் கவர்ச்சி பொருந்திய திருவுருவத்தைப் பார்க்க தினம் அடியார்கள் வருகின்றனர். மண்டலாபிஷேகமும் நடந்துவருகிறது.

# Divinity and Democracy

The divinity in all life is the true basis of democracy. In the divine play of hide and seek, he misses the joy of it who does not realise the essential unity of the characters engaged in the play. The great Barathiar was, to start with, a violent, even murderous political aspirant and patriot. Later, when he realised that the liberty and freedom he was seeking were only part of the ideal of the democracy of the world, he exclaimed "what folly; I thought of killing the poisonous worm creeping on to my side". The established denominations and parties must be and are intended to be mere alliances of individual weaknesses formed to generate a collective strength required for beneficient service. They are bound to be combinations for effective service to mankind conceived in a spirit of universal inclusiveness. When these combinations deteriorate into packets of exclusiveness, generating a spirit of mutual jealousy, hatred and rivalry, the original good purpose intended to be served seems lost. In this land where divine democracy had always triumphed even amidst an atmosphere of atheistic imperialism, let us hope, the political swaraj of Mahatma Gandhi will pave the way, and that, soon, for the realisation of the individual swarajya among the entire population.

May love, sacrifice and service be the watchwords of human endeavour.

*THIRUPPUGAL MANI*

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமும் கூற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்
சுடலைதனில் நடமாடும் சோதி என்றும்
கடிமலர்த்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASÖKA
சென்ட்
நெ. 1506

-572-


# Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113


## அரிய தெய்வ அருள் நூல்கள்

குக ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |

தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்)
சிவநேயச் செல்வர்கள் ,, ,,
கணபதி பக்தர்கள் ,, ,,
முருகனடியார் ,, ,,

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras-1